82

தென்னிந்திய தொழில் வித்தகன்,

# ஜி. டி. நாயுடு



44264

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 SEP 1950
MADRAS

[illegible handwritten call number] M93
N49-2
100074

# தென்னிந்தியத் தொழில் விஞ்ஞானி

# ஜி. டி. நாயுடு

M. I. P. PROJECT
Microfilmed.

★

ஆசிரியர்

டி. எம். முத்து

★

பயோனீர் பப்ளிஷர்ஸ்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1950 [விலை அணா 14

முதற் பதிப்பு, 1949.
இரண்டாம் பதிப்பு, 1950.

100074

Approved by the Madras Text-Book Committee for class use Non-detailed study. (Vide consolidated list of Approved Books for use in Secondary & High Schools, Page 116 dated May 23rd 1950)

D ω M93
31N49—2

M. I. P. PROJECT
Microfilmed.

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

M. I. P. PROJECT
Microfilmed.

திருச்சிராப்பள்ளி
அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர்
வித்துவான் தி. சி. குழந்தைவேலன் அவர்களின்

## முன்னுரை

விஞ்ஞானிகளின் நுண்ணிய அறிவின் திறத்தாலும் இடையருத உழைப்பினுலும் புத்தம் புதிய கருவிகள் தோன்றி விந்தைச் செயல்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. இவற்ருல் மக்கள் வாழ்வு புது மலர்ச்சி பெற்றுப் பொலிவுடன் ஒளிர்கிறது.

இந்திய மக்கள் விஞ்ஞானத்தினுல் கண்டறிந்த கருவிகளைப் பயன்படுத்திப் புதுமை வாழ்வில் களிக்கிருர்கள். ஆனுல், புதுமைக் கருவிகளைக் கண்டுபிடித்த விஞ் ஞானிகள் மேனுட்டிலேயே மிளிர்கிருர்கள். இந்தியா விஞ்ஞானத் துறையில் எளிய நிலையில் இருக்கிறது என்பதற்கு இதுவே போதிய சான்ருகும். இதற்குக் காரணம் இந்தியா அடிமைத்தளையில் பிணிப்புண் டிருந்ததே எனலாம். இப்பொழுது சுதந் தரம் அடைந்துவிட்டதால், விஞ்ஞானத் துறையில் இந்தியா முன்னேறிப் பல புத்தம் புதிய கருவிகளைக் கண்டுபிடிக்கும் விஞ் ஞானிகள் பெருகி, மேனுட்டார் போற்றும்

பெருமை பெறும் என எதிர்பார்க்கலாம். இதற்கு விஞ்ஞானிகளின் வரலாறு பெருந் துணை புரியும்.

தென்னாட்டாராகிய திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் இயந்திரத் தொழில் விஞ்ஞானியாகவும் தாவர விஞ்ஞானியாகவும் விளங்குவது பெருமைக் குரியதாகும். இவரது வரலாறு செந்தமிழ் நாட்டு இளைஞர்களுக்குச் சிறந்த விருந்தாகும்; தொழில் துறையிலும் விஞ்ஞானக் கலைத் துறையிலும் ஊக்கமூட்டும் தூண்டுகோலாகும். இவ் வரலாற்றை இளைஞர்களுக்கு அளிக்க முன் வந்த அன்பர் திரு டி. எம். முத்து அவர்கள் ஒரு சிறந்த தொண்டினைச் செய்துள்ளார்.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்குப் பயன் படவேண்டும் என்ற நோக்கத்துடனேயே அமைக்கப்பட்டுள்ள இவ் வரலாற்று நூல், உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர், தமிழ் ஆசிரியர்களாலும் கல்வியிலாகா அதிகாரிகளாலும் ஆதரிக்கப்படுமென்று நம்புகிறேன்.

தி. சி. கு.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| **I.** | **வாழ்க்கை வரலாறு** | **பக்கம்** |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பிறப்பிடமும் பெற்றோரும் | 5 |
| 3. | கல்விப் பயிற்சி | 7 |
| 4. | இளம் பருவ நிகழ்ச்சிகள் | 9 |
| 5. | வியாபார நோக்கும் கல்வியில் கருத்தும் | 13 |
| 6. | மோட்டார் சைக்கிளும் முன்னேற்ற எண்ணமும் | 16 |
| 7. | பஞ்சு வியாபாரம் | 20 |
| **II.** | **யூ. எம். எஸ். தோற்றம்** | |
| 1. | மோட்டார் பஸ் முதலாளி | 24 |
| 2. | கூட்டுறவு சாதனை | 26 |
| 3. | நிர்வாகத் திறமை | 29 |
| 4. | தொழில் நிலையங்கள் | 31 |
| 5. | மோட்டார் மன்னன் | 36 |
| **III.** | **உலகப் பயணம்** | |
| 1. | முதற் பயணம் | 39 |
| 2. | இரண்டாம் பயணம் | 44 |
| 3. | மூன்றும் பயணம் | 52 |

**IV.** அருங் கண்டு பிடிப்புகள்

1. இயந்திர விஞ்ஞானி 60

2. தாவர விஞ்ஞானி 67

**V.** கைத்தொழிற்சாலைகள்

1. மின்சார மோட்டார் தொழிற்சாலை 73

2. மோட்டார், ரேடியோ தொழிற்சாலைகள் 77

**VI.** பயிற்சிக் கல்லூரிகள் 81

**VII.** நாயுடுவின் நன்கொடைகள் 87

**VIII.** அறிஞர்களின் பாராட்டு 94

**IX.** நாயுடுவின் நற்பண்புகள் 99

# தென்னிந்தியத் தொழில் விஞ்ஞானி
# ஜி. டி. நாயுடு

••○ ★ ○••

## I. வாழ்க்கை வரலாறு

### 1. முன்னுரை

**இயற்கையின் இன்பம்**

இவ்வுலகில் காணும் இயற்கைக் காட்சிகள் எண்ணிறந்தன. பரந்த வானம், விரிந்த கடல், உயர்ந்த மலை, நிறைந்த காடு, ஒளிமிகு இரு சுடர்கள், மின்னொளி வீசும் பன்மீன்கள் முதலியனவெல்லாம் இயற்கையில் என்றும் நின்று இன்பம் தருவன வன்றோ? மண்ணும், நீரும், தீயும், காற்றும், வெளியும் இவ்வுலக மலர்ச்சிக்கே அடிப்படையாயுள்ள இயற்கைப் பொருள்களன்றோ?

**கவிஞன் செயல்**

இவற்றைக் காணும் கவிஞர்கள் இவற்றின் நுட்பங்களில் மனந்தோய்ந்து களிக்கிறார்கள்; தாங்கள் கண்டறிந்த உண்மைகளைக் கவிகளில் அமைத்துப் பாடி மகிழ்கிறார்கள். அக்கவிகளைப் படிக்கும் மக்கள் இயற்கையழகின் நுட்பங்களை எளிதில் உணர்ந்து இன்புறுகிறார்கள்.

**விஞ்ஞானியின் செயல்**

ஆனால், விஞ்ஞானிகளோ இயற்கைப் பொருள்களின் நுட்பங்களை ஆழ்ந்து நோக்கி அவற்றின் இயல்பு, ஆற்றல், பயன் முதலியவற்றை ஆராய்ந்து

உண்மை காண முயல்கிறார்கள்; முயன்று அவற்றை நேரடியாக மக்களுக்குப் பயன்படச் செய்கிறார்கள்.

**கவிஞனும் விஞ்ஞானியும்**

இயற்கைப் பொருள்கள் யாவும் மக்களுக்குப் பயன்படுவதற்கே உள்ளன. அவற்றின் நுட்பங்களை உணர்ந்து களித்து மக்களுடைய அக வாழ்க்கையைச் செம்மைபெற வகுத்து வழிகாட்டுவது கவிஞனது செயல். அந்நுட்பங்களின் உண்மைகளால் மக்களின் புற வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றை வகுத்து வழிகாட்டியுதவுவது விஞ்ஞானியின் செயல். இருவரும் மக்கள் வாழ்வை நலமுறச்செய்யும் சிற்பிகள். 'அறிவுடையான் கண்ணதே உலகம்' என்பது வாய்மை மொழியன்றோ?

**விஞ்ஞானிகள் கண்ட புதுமைகள்**

இயற்கையிலமைந்துள்ள ஆற்றல்களைப் பிரித்தெடுத்துக் காட்டி, உருவமூட்டி மக்களுக்கு நன்மை செய்யும் கருவிகளாகவும் பொருள்களாகவும் தந்து வெற்றி கண்டவர்கள் விஞ்ஞானிகள். காற்றில் பறந்து செல்ல வானவூர்திகள், கடலில் நீந்திச்செல்ல நீராவிக் கப்பல்கள், நிலத்தில் விரைந்து செல்லப் பொறியூர்திகள், தொலைவில் பேசத் தந்திகள், புகைப் படங்கள், நிழற்படங்கள் முதலிய எண்ணிறந்த வியத்தகு பொருள்களெல்லாம் இவர்களின் கூரிய மதிவன்மையாலும், இடையறா உழைப்பாலும் கண்டு பிடிக்கப்பட்டவைகளன்றோ? மின்சாரத்தின் விந்தையால் மக்கள் வாழ்வே புது மலர்ச்சிபெற்று விளங்குவதற்கு இவர்களின் அரிய சாதனைகளன்றோ காரணம்? உலகையே கலக்கி, அரசியல் தலைவர்களையெல்

லாம் நிலைகலங்கவைக்கும் அணு சக்தி இவர்கள் கண்டறிந்த புதுமையன்றே? இன்னும் எத்தனைப் புதுமைகள் தோன்றுமென்பதை எவரே கூறவல்லார்?

**விஞ்ஞானிகள்**

விஞ்ஞான ஆராய்ச்சி மேனாட்டிலேயே வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஈன்ஸ்டீன், மார்க்கோனி, தாமஸ் ஆல்வா எடிஸன் முதலிய பேரறிஞர்களெல்லாம் மேனாட்டினரே என்பதை விளம்பவும் வேண்டுமோ? இக்காலத்தில் உலகில் காணப்படும் புதுமைப் பொருள்களெல்லாம் மேனாட்டறிஞர்களாலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன வென்பதை யாவரும் அறிவர். அவ்வாறயின் நம்நாட்டில் விஞ்ஞானிகளே தோன்றவில்லையா? புதுமைகளைக் கண்டறியவில்லையா?

சர். சி. வி. இராமன் உலகம் போற்றும் விஞ்ஞானப் பேரறிஞர்; நோபல் பரிசு பெற்றவர். ஜகதீச சந்திரபோஸ் மேனாட்டாரும் கொண்டாடும் தாவர விஞ்ஞானப் பேரறிஞர். பி. ஸி. ராய் விஞ்ஞானத்தில் கூரிய மதி படைத்தவர். இவர்கள் இந்தியர்களே. இன்னும் விஞ்ஞானத்தில் பேரறிவு படைத்த இந்தியப் பெரியோர்கள் பலர் உள்ளனர். இவர்களின் அறிவாராய்ச்சித் திறன்களெல்லாம் தொழில் முறையில் மக்களுக்குப் பயன்படவில்லை. இதற்குக் காரணமென்ன?

**அடிமையும்—சுதந்தரமும்**

மேனாட்டினர் சுதந்தர மக்கள். சுதந்தர நாட்டில் விஞ்ஞானிகள் எண்ணியதைச் செயலில் கொண்டு வருவதற்கு அந்நாட்டு அரசியலார் வேண்டிய வசதி

களைச் செய்து ஆதரவு நல்கினர். நம் நாட்டினரோ அடிமையிருளில் அல்லற் பட்டிருந்தனர்.

அடிமை நாட்டில் விஞ்ஞானிகளின் செயலுக்கு ஆதரவு ஏது? அதனுலேயே நம் நாட்டு விஞ்ஞானிகளின் அறிவாராய்ச்சிகளெல்லாம் கருவிலேயே நின்று, உருவம் பெருமல் போயின. இப்பொழுது இந்தியா சுதந்தரம் பெற்றுவிட்டது. இனி நம் நாட்டு விஞ்ஞானிகளின் அறிவுத்திறன்களெல்லாம் மலர்ச்சி பெற்றுப் புத்துருவுடன் ஒளிவீசிப் பொலிவோடு உலாவுமென்பதில் தடையுண்டோ?

## தென்னிந்தியத் தொழில் விஞ்ஞானி

அடிமை இந்தியாவில் ஒளி குன்றி நிற்கும் விஞ்ஞானிகளில் ஒருவர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள். இவர் ஆராய்ச்சியளவில் நில்லாமல் செயலளவில் பல சாதனைகளைக் கண்டு வெற்றி வீறுடன் விளங்குகிருர். "நாம் வியக்கக் கூடிய அளவிற்கு இவரிடத்தில் அறிவுத்திறன் மலிந்திருப்பதை நான் என்னுடைய கண்களால் காண்கிறேன்" என்று சர். சி. வி. இராமன் பாராட்டிக் கூறுகிருரென்ருல் வேறென்ன விளம்ப வேண்டும்?

அமெரிக்கரும் கண்டு அதிசயிக்கக் கூடிய அரிய பொருள்களைக் கண்டு பிடித்துள்ள நாயுடு அவர்கள், பொதுவாக இந்தியர் என்பதும் சிறப்பாகத் தமிழகத்தார் என்பதும் நாமனைவரும் பெருமைப்படக் கூடியதாகும். தென்னிந்தியத் தொழில் விஞ்ஞானியாகிய திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் வரலாறு இளைஞர் உலகுக்குப் பெருவிருந்தாகும்; ஊக்கமும் ஆக்கமும் தருவதாகும்.

## 2. பிறப்பிடமும் பெற்றோரும்

### கோயம்புத்தூர்

தென்னிந்தியாவில் செல்வக் களிப்புடன் திகழும் நகரம் கோயம்புத்தூர். இது இயற்கை யெழில் பொருந்திய நில வளப்பமுடையது; வெப்பதட்பம் சம நிலையில் அமைந்து மக்கள் வாழ்க்கைக்கு மாண்பளிப்பது; மஞ்சள், புகையிலை, நெல் முதலிய பயிர்கள் செழித்து வளரும் வயல்களை யுடையது; வெண்பல் காட்டி நகைக்கும் நங்கையர் கூட்டமெனப் பஞ்சு வெடித்து நிற்கும் பருத்திச் செடிகள் நிறைந்த காடுகளை மிகுதியாகக் கொண்டிலங்குவது; வேளாண்மையிலும் வியாபாரத்திலும் இடைவிடாத மெய் முயற்சியுடைய மக்கள் நிறைந்து விளங்குவது; பஞ்சாலைகளும், நூலாலைகளும், சிறப்புடன் ஒளிர்வது; விவசாயக் கல்லூரி வீறுடன் திகழ்வது; வணிக மன்னர்களும், அவர்களின் வான்தோய் மாளிகைகளும் நிறைந்துள்ள பெருமையுடையது. வணிகத்திலும் கைத்தொழிலிலும் ஈடுபட்டுச் செல்வங் கொழிக்கச் செய்யும் தாளாண்மையிற் சிறந்த மக்கள் பெருகிய மாவட்டம் கோயம்புத்தூரே என்று கூறலாம். பருத்தி விளைவிலும் ஆலைத் தொழிலிலும் சிறந்த இந்த நகரம் பொன்னகரராய்ப் பொலியுந் தன்மையால் இதனைத் 'தென்னாட்டு அலகாபாத்' என்று மக்கள் கொண்டாடுகின்றனர்.

### கலங்கல் சிராமம்

இச் சிறப்பு வாய்ந்த கோயம்புத்தூருக்கு அருகில் கலங்கல் என்னும் ஓரழகிய சிற்றூர் அமைந்திருக்

கிறது. இது சோலைகளும் காடுகளும் சூழ்ந்து விளங்குவது. இக் கலங்கல் கிராமமே திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் பிறந்த பெருமையுள்ள ஊர்.

## கோபால்சாமி நாயுடு

இக்கலங்கல் கிராமத்தில் கோபால்சாமி நாயுடு என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் சிறு வியாபாரி. இவருக்குச் சொந்தமான வீடும் தோட்டங்களும் உண்டு. தோட்டங்களிலிருந்து புகையிலை, பருத்தி முதலிய பொருள்களை விளைத்து வியாபாரம் செய்வது இவரது தொழில். இதனால் கிடைக்கும் வருவாயைக்கொண்டு வாழ்க்கையை முட்டின்றி நடத்தி வந்தார். இவரே நமது துரைசாமி நாயுடு அவர்களின் தந்தையாவார்.

## தாயும் மாமனும்

துரைசாமி பிறந்த ஓராண்டுக்குள்ளேயே தாய் இம்மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலக வாழ்வெய்தினர். ஆகையால், துரைசாமி தாயற்ற குழந்தையாய் மாமன் வீட்டில் வளரும் நிலை ஏற்பட்டது. தாய்மாமன் பெயர் இராமசாமி நாயுடு. இவருடைய ஊர் இலட்சுமி நாயக்கன் பாளையம். இது கோயம்புத்தூருக்குத் தென்கிழக்கில் பதினன்கு கல் தொலைவில் இருக்கிறது. இராமசாமி நாயுடு தன் மருகனைப் போற்றி வளர்த்தார். துரைசாமி மாமன் மனையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வரலானர்.

## 3. கல்விப்பயிற்சி

### குழந்தைப் பருவம்

துரைசாமி நான்காண்டுகள் நிரம்பியவரானார். அப்பருவத்தில் இவர் மிகவும் சுறுசுறுப்புடையவராய் விளங்கினார்; எந்நேரமும் ஏதேனும் ஒரு செயல் புரியும் பெருவிருப்பினராயிருந்தார். இது, மாமனுக்கு மகிழ்ச்சியையளித்ததென்றாலும் தன் அலுவல்களைக் கவனிக்க முடியாதபடி தொந்தரவாயிருந்ததால், துரைசாமியைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பத் தூண்டியது. ஆகையால், துரைசாமி அச்சிற்றூரிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.

### திண்ணைப் பள்ளிக்கூடம்

சிற்றூரில் பெரிய பள்ளிக்கூடம் ஏது? ஆசிரியர் வீட்டுத் திண்ணையே பள்ளிக்கூடம். அங்குப் பரப்பிய ஆற்று மணலே கற்பலகை; கைவிரலே எழுதுகோல். இது அக்காலத் தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடத்தின் நிலை. தமிழகத்துச் சிறுவர்கள் மணலில் 'அ' 'ஆ' முதலிய எழுத்துக்களை விரலால் எழுதியும், வாய்மொழியாகப் பாடம் சொல்லியும் கல்வி பயில்வது வழக்கம். இவ்வழக்கப்படியே துரைசாமியும் கல்வி பயிலலானார்.

### பள்ளிக்கூடத்திலிருந்து விடுதலை!

ஆனால், துரைசாமிக்கு இந்தக் கல்வி கற்பதில் ஊக்கம் பிறக்கவில்லை. சுறுசுறுப்பாக ஓடியாடி விளையாடித் திரிந்த துரைசாமிக்கு இத்திண்ணைப் பள்ளிக்கூடம், காலும் கையும் கட்டிப்போடப்பட்ட சிறைக்

கூடமாகவே தோன்றியது. மூன்று ஆண்டுகள் வரையில் பொறுமையுடன் கல்வி பயின்றுவந்த துரைசாமி, ஒரு நாள் பொறுமையிழந்து பள்ளிக்கூடம் போக மறுத்துவிட்டார். இதனால் சினங்கொண்ட மாமன் இவரைக் கலங்கல் கிராமத்திற்கு அனுப்பிவிட்டார்.

## தோட்டக் காவலன்

கோபால்சாமி நாயுடு தன் மகனை அன்புடன் வரவேற்று மகிழ்ந்தார். ஆனால் சில நாட்களிலேயே தன் மகன் பள்ளிக்கூடம் செல்ல மறுப்பதைக் கண்டு சினம் பொங்கினர். அந்த வெறுப்பில் தன் மகனைத் தன் தோட்டத்துக்குக் காவலனாக இருக்கச் செய்தார். பள்ளிக்கூடம் போக விரும்பாத மகனுக்குத் தக்க தண்டனை விதித்துள்ளதாகத் தந்தை எண்ணிச் சிறிது ஆறுதலடைந்தார்.

## தோட்டப் பணியும் படிப்பும்

கலங்கல் கிராமத்திற்குச் சிறிது தொலைவில் இருந்தது தோட்டம். இத்தோட்டத்தைக் காவல் காக்கும் பணியை மேற்கொண்டார் துரைசாமி. தந்தை நினைத்ததுபோல் இப்பணி இவருக்குத் தண்டனையாகத் தோன்றாமல் விருப்பமுள்ள வேலையாகவே யிருந்தது. ஏனென்றால் பரந்த தோட்டத்தில் மனம்போல் ஆடியோடிக் களிக்கலாமன்றோ? இன்னும் செயல் புரிவதில் சுறு சுறுப்பு மிகுந்த இவருக்கு மண் வெட்டுதல், மாடு மேய்த்தல் முதலிய பணிகள் விளையாட்டுக்களாகவே இன்பம் தந்தன.

துரைசாமிக்குப் பள்ளிக்கூடம்தான் வேம்பாக வெறுப்பளித்ததேயன்றிப் படிப்பு கரும்பாகவே

விருப்பளித்தது. ஆகையால் தோட்டப் பணிகளின் இடையிடையே ஓய்வு நேருங் காலங்களில் அச்சுப் புத்தகங்கள் என்று கையில் கிடைத்தவற்றை யெல்லாம் படித்துக் களிப்பதையும் விளையாட்டாகவே கொண்டு, உடல் வளர்ச்சிக் கேற்ற அறிவு வளர்ச்சியும் பெற்றுவந்தார். இங்ஙனம் ஆசிரியரின்றியே எழுத்தறிவு பொருளறிவுப் பயிற்சி அரும்பி மணங் கொண்டிருந்தது. ஆகையால் துரைசாமி எப்புத்தகத்தையும் நன்ருய்ப் படித்தறியும் திறன்பெறலானார்.

## 4. இளம்பருவ நிகழ்ச்சிகள்

### வைக்கோல் வண்டி விளையாட்டு

உணவு நேரம், உறங்கும் நேரம் தவிர மற்ற நேரம் முழுவதும் தோட்டமே துரைசாமிக்கு வாழ்விடமா யிருந்தது. தோட்டப் பணியை மேற்கொண்ட துரைசாமி, கல்வியிலும் கருத்துடையவராய் வளர்வதைக் கண்டு தந்தை மனமகிழ்ந்தார். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன.

தீபாவளி என்பது சிற்றூர்களில் வாழ்வோர்க்குப் பெருங்களிப்பைத் தரும் பண்டிகையல்லவா? பெரியோர்களைக் காட்டிலும் சிறுவர்களுக்குப் பெருங் கொண்டாட்டமான நாளன்ருே அது? துரைசாமி தோட்டக் காவலராயிருந்த ஓராண்டில் தீபாவளி வந்தது. அன்று தன் மகனுக்குப் புதிய ஆடை கொடுத்து அணியச் செய்து களிப்பிக்கத் தந்தை விரும்பினார். உடனே ஓர் ஆளைத் தோட்டத்துக்கு அனுப்பித் தன் மகனை அழைத்துவரச் செய்தார். தந்தையின் கட்டளைப்படி துரைசாமி

வீட்டை நோக்கி வரலானார். ஆனால் தீபாவளி கொண்டாடும் பேறு துரைசாமிக்கு வாய்க்கவில்லை.

துரைசாமி வரும் வழியில் வைக்கோல் வண்டி யொன்று சென்றுகொண்டிருந்தது. இதைக்கண்ட துரைசாமி அதனுடன் விளையாட விரும்பினார். வண்டியின் பின்புறம் போய் வைக்கோலில் தீக்குச்சி யைக் கிழித்து வைத்தார். சிறிது நேரத்திற்கெல் லாம் வைக்கோலில் தீ பரவி வண்டியுட்பட யாவும் எரிந்து சாம்பலாயிற்று. வைக்கோல் வண்டி தீப் பிடித்து எரிவதைப் பார்த்துக் களித்தார் துரைசாமி!

இச் செய்தியை யறிந்த கோபால்சாமி நாயுடு மகன் மீது மிகவும் சினங்கொண்டார். வீட்டுக்கு வர வேண்டாமென்று உடனே தோட்டத்துக்குப் போகுமாறு கட்டளையிட்டார். அது மட்டுமன்று: இனி இரவு பகல் எந்த நேரமும் வீட்டுக்கு வரலாகா தென்றும் கடினகாவல் தண்டனை விதித்தார்! இத் தண்டனைக்கு உட்பட்ட துரைசாமி கூண்டுப் பறவை போல் தோட்டத்தில் ஒன்பது ஆண்டுகளைக் கழித் தார். காலம் கருணை காட்டுமல்லவா? அப்பால், துரைசாமி வீட்டுக்கு வந்து போகும்படி தந்தையின் கருணை கிட்டியது.

**மணியக்காரர்!**

துரைசாமி தோட்டக்காவலராக வாழ்ந்திருந்த காலத்தில் மணியக்காரராக வேலைபார்க்கும் எதிர் பாராத ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. கலங்கல் கிராம மணியக்காரர் வெளியூர் போகவேண்டியிருந்தது. அப்பொழுது தன் அலுவலை யாரிடம் ஒப்படைத்துப்

போகலாமென்று எண்ணி, அதற்கு ஏற்றவர் துரைசாமியே என்று முடிவுசெய்து அவ்வாறே செய்தார். கிராமத் தலைவர் ஏதேனும் இன்றியமையாத காரணத்தால் வெளியூருக்குச் செல்லநேரிட்டால் தமக்கு நம்பிக்கையான ஒருவரைத் தமது வாரிசாக ஏற்படுத்தித் தமது வேலையை அவருக்கு எழுதி வைத்துவிட்டுச் செல்வது அக்கால முறை. கலங்கல் கிராம மணியக்காரருக்குத் துரைசாமியே நம்பிக்கைக்குரியவராகத் தோன்றியது குறிப்பிடத் தகுந்ததன்றோ?

துரைசாமி மணியக்காரராக அலுவல் பார்க்கும் பொழுது, தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஆகியோர் தமது பரிவாரத்துடன் ஏதோ ஓர் அவசர அலுவலை முன்னிட்டுக் கலங்கல் கிராமத்திற்கு வந்தார்கள். துரைசாமி ஒரு எருமை மாட்டின்மேல் ஏறிக்கொண்டு எதிரில் வருவதைக்கண்டு அவர்கள் நகைத்தார்கள். அப்பொழுது துரைசாமி யாரென்று அவர்களுக்குத் தெரியாது. துரைசாமி வழக்கம் போல் தோட்டத்திலிருந்து எருமை மாட்டை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வந்து பால் கறந்ததும் தோட்டத்துக்குப் போகும்பொழுது அதில் ஏறிக்கொண்டு போனார்!

தாசில்தார் முதலியோர் கலங்கல் கிராமத்தையடைந்து, 'மணியக்காரர் எங்கே' என்று கேட்டனர். அங்கிருந்தவர்கள் 'இதோ அழைத்து வருகிறோம்' என்று ஓடித் தோட்டத்திலிருந்த துரைசாமியை அழைத்து வந்தார்கள். துரைசாமியைக் கண்டதும் தாசில்தார் முதலியோருக்கு மிகவும் வியப்பேற்பட்

டது. 'சற்றுமுன் சாலையில் எருமை மாட்டின்மீது சென்றவர் நீங்கள்தானே?' என்று ஐயந்தெளியக் கேட்டார் தாசில்தார். துரைசாமி சிறிதும் தயக்க மின்றி 'ஆம்; நான்தான்' என்று புன்சிரிப்புடன் விடையளித்தார்.

**விளையாட்டிலும் சொல்லுறுதி**

துரைசாமி இளம்பருவத்தில் முரடராகவும் தன்னையொத்த பருவமுடையவர்களை அடித்துத் துன் புறுத்தும் குறும்புச் செயலுடையவராகவும் இருந் தார் இவரைக் கண்டால் ஏனைய இளைஞர்களுக்கு நடுக்கந்தான். ஆயினும் ஒரு சமயம் இவர் இன்னொ ருவனிடம் அகப்பட்டுக்கொள்ளும்படி நேரிட்டது.

துரைசாமி ஓர் இளைஞனை அடிப்பதற்காகத் துரத்திக்கொண்டு ஓடினார். அவன் இவரிடம் பிடி படாமல் தன் இல்லத்திற்குள் ஓடினான். இவரும் பின்தொடர்ந்தார். உள்ளே ஊஞ்சல் தொங்கிக் கொண்டிருந்தது. அதைச்சுற்றி வந்தான் அவன். இவரும் ஊஞ்சலைச்சுற்றி அவனைப் பிடிக்கமுயன்றார். அப்பொழுது ஊஞ்சல் கம்பியில் தலைமோதி நிலை கலங்கி அவனிடம் அகப்பட்டுக்கொண்டார். தன்னை விட்டுவிடும்படி அவனிடம் வேண்டினார். அவன் 'இரண்டு ஆண்டுகளுக்கு என்னைத் துரத்தித் தொந் தரவு செய்யக்கூடாது; நான் அடித்து உதைத்தா லும் எதிர்க்காமல் பட்டுக்கொள்ளவேண்டும். இந் நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் உன்னை விட்டு விடுகிறேன்' என்றான். துரைசாமி என்ன செய் வார்? வேறு வழியின்றி அவன் சொல்லிய நிபந்தனை களுக்கு உடன்பட்டு விடுதலை பெற்றார்.

பிறகு துரைசாமி, 'இது விளையாட்டுத்தானே' என்று நினைக்கவில்லை. இரண்டாண்டு கழிகிறவரையில் அந்த இளைஞனே வியப்படையும்படி, தான்சொல்லிய உறுதி மொழியைக் காப்பாற்றினர். அவன் அடித்துத் துன்புறுத்தினலும் அவனை ஒன்றும் செய்யாதிருந்தார். என்னே துரைசாமியின் மனவுறுதி! பிற்காலத்தில் பெரியோராய் விளங்குபவரின் இளம் பருவ வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இத்தகைய விந்தைச் செயல்கள் விளைவது இயல்பேயன்றே?

**5. வியாபாரநோக்கும் கல்வியில் கருத்தும் தலைவலி மருந்து**

தோட்டக் காவலராகவும், சிலநாள் மணியக்காரராகவும் பண்பட்ட துரைசாமி, ஒரு நாள் தலைவலி மருந்தின் காலிப்புட்டி யொன்றைக் கண்டார். அது அமெரிக்காவிலுள்ள பார்க் டேவிஸ் கம்பெனியார் தயாரிப்பான **பெயின் கில்லர்** (Pain Killer) என்னும் மருந்தின் புட்டி. அதன் மேலுள்ள ஆங்கில எழுத்துக்களையும் முகவரிகளையும் துரைசாமி கூர்ந்து பார்த்துப் படித்தார். அந்த மருந்துப் புட்டியை அமெரிக்காவிலிருந்து வரவழைத்து விற்க வேண்டுமென்று விரும்பினர். ஆனல், நாட்டுப்புற இளைஞரான துரைசாமி, அமெரிக்காவுக்குக் கடிதம் எழுதும் வகையறியாது என்ன செய்யலாமென்று எண்ணினர். ஊக்கமுடையவர் எதனையும் செய்து முடிக்கும் ஆற்றல் பெறுவரல்லவா? அவ்வூருக்கு வந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஒருவரிடம் கட்டுக்கொண்டு துரைசாமி அமெரிக்காவுக்குக் கடிதம் எழுதித் தலைவலி மருந்தை வரவழைத்தார். நாட்டு மக்களிடம் அம்

மருந்தின் சிறப்பை எடுத்துரைத்துக் கொடுத்ததில் அவ் வியாபாரம் மிகுந்த வெற்றியளித்தது. மருந்தின் குணமறிந்த மக்கள் பலரும் வாங்கினர்கள். ஆகையால் துரைசாமிக்கு வியாபாரத்தில் ஊக்கம் வளர்ந்தது.

### கடிகாரம் முதலியன

தலைவலி மருந்து வியாபாரம் வெற்றி யளிக்கவே, துரைசாமி மேலும் வியாபாரத்தை விரிவடையச் செய்ய முனைந்தார். கடிகாரம், ஆர்மோனியம் முதலிய விலையேறப் பெற்ற பொருள்களை யெல்லாம் வரவழைத்து விற்கலானர். வியாபாரம் நன்கு நடைபெற்று நிறைந்த வருமானம் கிடைத்தது! இப்பொழுது துரைசாமியிடம் செல்வம் தாராளமாக இருந்தது.

### திருமணம்

துரைசாமி வியாபாரத்தில் கருத்தூன்றித் திறமையுடன் செல்வம் தேடுவதைக்கண்ட தந்தை மகிழ்வடைந்து இவருக்குத் திருமணம் செய்ய விரும்பினர். உடனே திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து, தமது கடமையைச் சிறப்பாக நிறைவேற்றினர். காளைப் பருவமடைந்த துரைசாமி திருமதி செல்லம்மாள் என்னும் நங்கையை மணந்து மகிழ்ந்தார்.

### 'இலக்கணம் துரைசாமி'

தோட்டக் காவல், வியாபார நோக்கம் இவற்றில் கருத்தூன்றி யிருந்தாலும், துரைசாமி கல்வி வளர்ச்சியிலும் கருத்தாகவே இருந்து வந்தார்.

இடையிடையே செந்தமிழ் நூல்கள் சிலவற்றைப் படித்து வந்தார். தமிழ்மொழி நூல்கள் இவர் உள்ளத்தைக் கவர்ந்ததால் மேலும் மேலும் பல நூல்களைப் படித்து வந்தார். 'இலக்கணம் கடினமானது என்று சொல்லக் கேள்விப் பட்டிருந்தவராதலால், அதைப் படித்தறிய வேண்டுமென்ற பிடிவாத எண்ணம் இவருக்குத் தோன்றியது. ஆகையால், தமிழ் இலக்கண நூல்களைத் தேடிப் படித்தார். கூர்மையான அறிவை இயற்கையில் பெற்றிருந்த துரைசாமிக்கு இலக்கணம் எளிதாகவே இருந்தது. நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலிருந்து பல செய்திகளைத் துரைசாமி எளிதாகச் சொல்வதைக் கேட்ட பலர் வியப்படைந்தார்கள். இதனால், 'இலக்கணம் துரைசாமி' என்னும் பட்டப் பெயரும் வழங்கலாயிற்று. ஆர்வமும் முயற்சியும் இருந்தால் எதுதான் கைகூடாது?

**'வைத்தியத் துரை'**

தலைவலி மருந்து வியாபாரத்திலிருந்து, நோய் தீர்க்கும் மருந்து முறைகளையும் கண்டறிய வேண்டுமென்னும் ஆவல் துரைசாமிக்கு ஏற்பட்டது. மருத்துவ நூல்கள் பலவற்றைத் தேடிப் படித்துப் பல வகை நோய்களையும் அந் நோய்களைப் போக்கும் பல வகை மருந்து முறைகளையும் அறிந்தார். நோய் கொண்டவர்களுக்குத் தாமறிந்த மருந்து முறைகளைத் தெரிவித்து, அவற்றால் அவர்களின் நோய்களைப் போக்கினார்; தாமே சில மருந்துகளைச் செய்தும் கொடுத்தார். இதனால் இவருடைய மருத்துவச் செயல் ஊர் மக்களிடம் பரவி, 'வைத்தியத் துரை'

என்ற பட்டத்தையும் தந்தது. பகுத்தறிவும் நெஞ்சுறுதியும் உடையோர்க்கு அரிய செயலும் எளிதாகத் தோன்றுவது இயல்பே போலும்!

## 6. மோட்டார் சைகிளும் முன்னேற்ற எண்ணமும்

### 'கிணற்றுத் தவளை'

துரைசாமி இருபது வயது இளைஞராய் விளங்கினர். ஆயினும், இது வரையில் அருகிலுள்ள கோவை நகரைப் பார்த்ததில்லை! கலங்கல் கிராமத்திலேயே தோட்டக் காவல் பணியிலும் சிறு வியாபாரச் செயலிலும் ஈடுபட்டிருந்த துரைசாமி, வெளியுலகம் தெரியாத கிணற்றுத் தவளையாகவே இருந்தார். இவர் ஒரு ஆங்கிலேயரைக் கூடப் பார்த்ததில்லை; புதுமைக் கருவிகள் ஒன்றையும் பார்த்ததில்லை. எளியோர்களுக்கு எல்லாவற்றையும் கண்டு களிக்க வசதியேது? நேரமேது?

### மோட்டார் சைக்கிள்

கிணற்றுத் தவளையும் ஒருகாலத்தில் நாட்டு வளப்பத்தையறிய நேருமல்லவா? இவ்வாறே துரைசாமியின் உள்ளத்தில் முன்னேற்ற எண்ணம் அரும்புவதற்கு ஒரு நிகழ்ச்சி எதிர்பாராதபடி ஏற்பட்டது.

நில அளவை அதிகாரியாகிய லங்காஷயர் என்ற வெள்ளையர் ஒருவர், மோட்டார் சைக்கிளில் கலங்கல் கிராமப் பக்கம் வந்தார். துரைசாமியின் முன்னேற்ற வாழ்க்கையைத் தொடங்கி வைப்பதற்காகவோ என்னவோ, அங்கு வந்ததும் மோட்டார் சைகிள் ஓடாமல் நின்று விட்டது. கிராமத்தில் மோட்டார் சைகிள் வந்ததென்றால், அது மக்களுக்கு

வேடிக்கையான கண்காட்சியல்லவா? இளைஞர்களுக்கோ புதுமைக் காட்சி. துரைசாமியும் மற்றும் பல இளைஞர்களும் வெள்ளையரைச் சுற்றி நின்று வியப்புடன் வேடிக்கை பார்த்தார்கள்.

வெள்ளையர் என்னென்னவோ செய்து வண்டியை ஓட்ட முயன்றார்; முடியவில்லை. பக்கத்தில் வேடிக்கை பார்ப்போரை நோக்கி மண்ணெண்ணெயும் துணியும் வேண்டுமென்று கேட்டார், வெள்ளையர். வண்டி ஓடுவதைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுடன் அருகில் நின்றுகொண்டிருந்த துரைசாமி, உடனே ஓடிப்போய் வெள்ளையர் வேண்டிய பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்தார். வெள்ளையர் எதையோ கழற்றினார்; மண்ணெண்ணெயைத் துணியில் நனைத்துத் துடைத்தார்; மீண்டும் முடுக்கினார். சிறிது நேரத்தில் வண்டி பட பட வென்ற பேரோசையுடன் புறப்படத் தயாராயிற்று. வெள்ளையர், துரைசாமிக்கு நன்றி கூறுபவர்போல் புன்சிரிப்புடன் பார்த்துவிட்டு வண்டியிலேறிப் போய்விட்டார்.

### துரைசாமியின் எண்ணம்

துரைசாமி, மோட்டார் சைகிள் விரைந்து ஓடுவதை விழித்த கண் மூடாமல் பார்த்துக்கொண்டே நின்றார். மாடு கட்டாமல் ஓடும் வண்டியல்லவா! அது எவ்வாறு ஓடுகிறது என்பதை அறியத் துடிதுடித்தது இவர் உள்ளம். என்றைக்காவது ஒரு மோட்டார் சைகிளை வாங்க வேண்டுமென்றும், அதன் பாகங்களைப் பிரித்துப்பார்த்து ஓடும் வகையை

அறிய வேண்டுமென்றும் துரைசாமி எண்ணினர். எதிர்கால இயந்திர மேதைக்கு இவ்வெண்ணம் தோன்றியது இயல்பன்றோ?

## இரயில் வண்டி

எண்ணுதல் எளிது. எண்ணியதை முயன்று அடைதல் அரிதன்றோ? துரைசாமி தான் எண்ணியதை அடைந்தே தீர வேண்டுமென்று உறுதி தளராமலிருந்தார். கையில் காற்பணமும் இல்லாதவர் மோட்டார் சைகிள் வாங்குவது எவ்வாறு? உறுதி மனம் படைத்த துரைசாமி பணம் தேடுவதற்காகக் கோவைக்குச் செல்வதென்று புறப்பட்டார். கோவையை நெருங்கும்பொழுது இன்னொரு அதிசயமும் துரைசாமியின் உள்ளத்தைக் கவர்ந்தது. அது என்னவென்றால், இரயில் வண்டி! ஆம், துரைசாமி இதுவரையில் இரயில் வண்டியைப் பார்த்ததில்லை. நாட்டுப்புறத்தில் அடைபட்டுக் கிடந்த எளிய துரைசாமி இரயில் வண்டியைத் பார்க்காமலிருந்ததில் வியப்பென்ன விருக்கிறது? புகையைக்கக்கிக்கொண்டு தண்டவாளத்தில் விரைவாய்ச் செல்லும் இரயில் எஞ்சினும் வண்டித் தொடரும், துரைசாமிக்குப் பெருவியப்பை யளித்தன.

## ஓட்டல் பணி

கோவையை யடைந்த துரைசாமி அங்கிருந்த ஓர் ஓட்டலில் பணியாளராக அமர்ந்தார். சம்பளம், மாதம் மூன்று ரூபாய்! லங்காஷயரின் மோட்டார் சைகிளை வாங்கும் வரையில் எத்தகைய துன்பமான பணியையும் பொறுமையுடன் ஏற்றுச் செய்வ

தென்று துணிவுகொண்டார். சில ஆண்டுகள் சென்றன. சம்பளமும் பிறசேமிப்புமாக நானூறு ரூபாய் வரையில் சேர்ந்தது. மூன்று ரூபாய் சம்பளத்தில் அமர்ந்த இளைஞர் நானூறு ரூபாய் சேர்த்தாரென்றால், எவ்வளவு உறுதியுள்ளம் உடையவராயிருக்க வேண்டும்?

## நினைவு நிறைவேறியது

குறித்த தொகை சேர்ந்ததும் துரைசாமி மகிழ்வடைந்தார்; உடனே ஓட்டல் பணியை உதறித் தள்ளினார்; வெள்ளையதிகாரியின் இருப்பிடத்தைத் தேடிச்சென்று கண்டார்; அவரிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். வெள்ளையர் துரைசாமியின் ஆவலைக்கண்டு மோட்டார் சைகிளை விற்பதற்கிசையவே, துரைசாமி அதை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தார். இக்கால இளைஞர்களைப்போல் அதன்மீது ஏறிச் சவாரி செய்ய வேண்டுமென்னும் எண்ணத்திற்கு மாருகத் துரைசாமி தன் விருப்பம்போல் அதைப் பிரிப்பதும் பூட்டுவதுமாயிருந்து அதிலுள்ள பல நுட்பங்களைத் தனக்குத் தானே கற்றுக் கொண்டார். தான் எண்ணியதுபோல் மோட்டார் சைகிளை விலைக்கு வாங்கிப் பிரித்துப் பார்த்து ஓடும் நுட்பத்தை யறிந்ததில் துரைசாமியின் உள்ளங் களிகொண்டது.

'எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்னும் வள்ளுவர் மொழி துரைசாமியிடம் உண்மையாய் ஒளிர்ந்தது.

## 7. பஞ்சு வியாபாரம்

### வியாபார எண்ணம்

மோட்டார் சைகிளை வாங்கி இயந்திர நுட்பங்களை அறிய வேண்டுமென்பதற்காகவே துரைசாமி பிறரிடம் பணியாளராக அமர உடன்பட்டார். அவ்வெண்ணம் நிறைவேறி விட்டதால், இனி சுதந்தரமாக என்ன செய்யலாமென்று ஆராய்ந்தார். கோவையில் பலர் பஞ்சு வியாபாரம் செய்து அதன் வாயிலாகப் பெரும் பொருள் திரட்டுவது, முன்னேற்றத்தில் முனைந்து நிற்கும் துரைசாமியின் உள்ளத்தைக் கவர்ந்தது. உடனே சில நண்பர்களிடம் கடனுகச் சில நூறு ரூபாய்கள் பெற்றுப் பஞ்சு வியாபாரம் செய்யத் தொடங்கினுர். சூதாட்டத்தை ஒத்திருந்த அப் பஞ்சு வியாபாரம் பஞ்சைத் துரைசாமியைச் சோதனை செய்து விட்டது. அதனுல், சில மாதங்களில் கையிலிருந்த தொகை முழுவதும் கரைந்து வெறுங்கையரானுர்!

### ஜின்னிங் பாக்டரியில் வேலை

சுதந்தர வியாபாரம் தோல்வியடையவே, பிறரிடம் வேலைக்கமர்ந்தேனும் வியாபாரம் செய்ய விழைந்தார் துரைசாமி. கோவையை யடுத்துள்ள ஒண்டிப் புதூரிலிருக்கும் ஜின்னிங் பாக்டரியில் வேலைக்குச் சேர்ந்து விடுவதென்று துணிந்தார். அந்தப் பாக்டரியின் முதலாளி இரக்கமில்லாத கொடியவரென்றும், அவரிடம் யாரும் நிலைத்து வேலை செய்வதில்லை யென்றும் சிலர் சொன்னுர்கள். இதைக் கேட்ட துரைசாமி 'அத்தகையவரிடம் வேலையிலிருந்து வருகிறேன் பார்!' என்று உறுதிமொழி

பகர்ந்து, அவ்வாறே சென்று இரண்டு ஆண்டுகள் வேலை செய்வதாக உடன்பட்டு வேலையிலமர்ந்தார். சில நாட்களுக்குள்ளாகவே முதலாளிக்குத் துரைசாமியின் வேலைத்திறமை, குணம் முதலியவை பிடித்துவிட்டன. ஆகையால், அவர் எல்லோரிடமும் கடிந்து பேசுவதுபோல் இவரிடம் பேசாமல் அன்பாகவும் மரியாதையாகவும் நடத்தினர்.

## கடமையில் நேர்மை

துரைசாமி ஜின்னிங் பாக்டரியில் முக்கிய அலுவலாளராக இருந்தார். இவருடைய தந்தை கோபால்சாமி நாயுடு அந்த ஜின்னிங் பாக்டரி முதலாளியிடம் வாடிக்கைப் பஞ்சு வியாபாரி. ஒரு நாள் கோபால்சாமி நாயுடு வழக்கம்போல் பஞ்சுப் பொதியைக் கொண்டு வந்தார். தந்தையின் பஞ்சை நிறுத்து வாங்க வேண்டிய பொறுப்பு மகனுக்கு ஏற்பட்டது. யாராயிருந்தாலும் பாரம் ஒன்றுக்கு ஐந்து இராத்தல் தள்ளி நிறுக்க வேண்டுமென்பது முதலாளியின் கட்டளை. துரைசாமி எடையில் வியாபார நுட்பத்தைக் கையாண்டு நிறுத்தார். தந்தைக்கு ஆத்திரம் வந்துவிட்டது. 'என்னடா இது? என்னிடத்திலுமா இந்த அநியாயம்?' என இறைந்தார். 'ஆம்; உங்களிடத்தில் இனி பாரத்துக்குப் பத்து இராத்தல்!' என்று பதிலளித்தார் துரைசாமி. கோபால்சாமி நாயுடு முதலாளியிடம் முறையிட்டார். 'துரைசாமி செய்வதில் குறுக்கிட முடியாது' என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார் முதலாளி. என்ன செய்வார் தந்தை? பேசாமல் வியாபாரத்தை முடித்துக் கொண்டு போனர்!

**இரண்டாண்டு வேலை!**

ஒண்டிப் புதூர் ஜின்னிங் பாக்டரி முதலாளியிடம் வீம்புக்காகவே வேலையில் அமர்ந்தார், துரைசாமி. அவரிடம் தன்னால் நீடித்து வேலையிலிருக்க முடியும் என்பதைக் காட்டி விட்டாரல்லவா? 'இரண்டு ஆண்டுகள்' என்னும் கால வரையறை முடிந்தபின், முன்னேற்றப் பாதையை நோக்கும் துரைசாமி அங்கு இருப்பாரா? ஒரு நாள் நள்ளிரவு பதினொரு மணியிருக்கும். ஜின்னிங் பாக்டரி முதலாளி கோவை அவினாசி ரோட்டிலுள்ள ஓரிடத்தில் தமது மோட்டாரை நிறுத்திவிட்டு ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தார். துரைசாமி திடீரென்று முதலாளியின் முன் போய் நின்று திறவுகோலை நீட்டினார். முதலாளிக்கு ஒன்றும் விளங்கவில்லை 'ஏன், என்ன செய்தி?' என்று வியப்புடன் கேட்டார். 'நான் வேலைக்கு வரும்போது தெரிவித்த உறுதி மொழிப்படி இன்று இந்த நேரத்தோடு இரண்டு ஆண்டுகள் முடிகின்றன. இனி நான் வேலையில் இருக்க முடியாது' என்று அமைதியாகத் தெரிவித்தார் துரைசாமி. முதலாளி என்னென்னவோ சொல்லிப் பார்த்தார். ஒன்றும் பயனளிக்கவில்லை. துரைசாமி முதலாளியிடம் விடைபெற்றுச் சென்றார்.

**சொந்தத்தில் ஜின்னிங் பாக்டரி**

ஒண்டிப் புதூர் ஜின்னிங் பாக்டரியில் வேலை செய்த துரைசாமி, தாமே சொந்தத்தில் ஜின்னிங் பாக்டரியைத் தொடங்கி நடத்த வேண்டுமென்று ஆவல் கொண்டார். பாக்டரியில் வேலை பார்த்த

அனுபவம் சும்மாவிராதல்லவா? துரைசாமி பல வகையில் முயன்று திருப்பூரில் ஒரு ஜின்னிங் பாக்டரியைத் தொடங்கினர். இவர் தொடங்கிய காலம், முதல் உலகப் பெரும்போர் முடிவு பெற்றிருந்த நல்வேளையாயிருந்ததால் வியாபாரம் சுறு சுறுப்பாக நடை பெற்றது. ஆகையால் இரண்டொரு ஆண்டுகளில் துரைசாமி ஒன்றரை இலட்ச ரூபாயுள்ள பெரிய முதலாளியானர். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது பொய்யாகுமோ?

**பஞ்சு லாபம் பம்பாயில்......?**

பஞ்சு வியாபாரத்தில் பெரிய முதலாளியான துரைசாமி அத்துடன் நிற்க விரும்பவில்லை. முற்போக்கு மனம் படைத்தவர் உச்சி வரையில் சென்று பார்க்க முனைவது இயல்பேயன்றே? வடநாடு சென்று வர்த்தகம் செய்தால் இன்னும் பல லட்சம் கிடைக்குமென்று நினைத்தார், துரைசாமி. உடனே பம்பாய்க்குச் சென்று பஞ்சு வர்த்தகம் செய்யலானர். இவர் எண்ணியபடி பஞ்சுவர்த்தகம் சிறப்பாக நடை பெருமையால் கையிலிருந்த ஒன்றரை லட்ச ரூபாயும் பஞ்சாய்ப் பறந்தது. கைமுதலை யிழந்த துரைசாமி மனத் துணிவை இழக்காமல் கோவை வந்து சேர்ந்தார் எதிர்காலத்தில் இயந்திர மேதையாகவும் தொழில் விஞ்ஞானியாகவும் விளங்க வேண்டிய துரைசாமியை வெறும் பஞ்சு வியாபாரியாக இருக்க இயற்கை விடுமா?

# II. யூ. எம். எஸ். தோற்றம்

## 1. மோட்டார் பஸ் முதலாளி

**'இனி என்ன செய்வது?'**

பம்பாயில் செய்த பஞ்சு வியாபாரம் படுதோல்வியடைந்தாலும், துரைசாமி மனந்தளரவில்லை. கோவைக்கு வந்ததும் மீண்டும் அவ்வியாபாரத்தையே தொடங்க நினைத்தார். அதற்கு முதல் வேண்டாமா? சில நண்பர்களின் உதவியை நாடினார். தோல்வியடைந்தவர்க்கு யார் உதவி செய்வார்கள்? எவரும் கடன் கொடுக்க முன்வரவில்லை. இதற்கிடையில் தந்தை கோபால்சாமி நாயுடு, மகனின் நிலையறிந்து கலங்கல் கிராமத்திற்கு வந்து விடும்படி அழைத்தார். துரைசாமி மறுத்துவிட்டார். தோல்விக்கு அஞ்சிப் பின்வாங்குவது வீரனுடைய இயல்பில்லையன்றோ? ஆயினும், 'இனி என்ன செய்வது? மீண்டும் தொழிலாளியாவதா?' என்று துரைசாமியின் மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது.

**எதிர்பாராத உதவி**

துரைசாமி, 'என்ன செய்வது' என்று நெடுநாள் கலங்கிக் கொண்டிருக்கவில்லை; விரைவிலேயே ஒரு முடிவுக்கு வந்தார். கோவையிலுள்ள சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற வெள்ளையரின் மோட்டார்த் தொழிற்சாலையை நாடிச்சென்றார். ஸ்டேன்ஸ் துரையைக் கண்டு "உங்கள் தொழிற்சாலையில் எனக்கு ஒரு 'மெக்கானிக்கல்' வேலை கொடுங்கள்" என்று கேட்டார். துரை, துரைசாமியின் பஞ்சு வியாபாரத்தையும், நேர்மைக் குணத்தையும் இயந்திர நுட்ப அறிவையும்

பற்றி முன்னமேயே கேள்விப்பட்டிருந்தார். ஆகை யால், ஸ்டேன்ஸ் இவரைத் தன்கீழ் வேலைக்கமர்த்திக் கொள்ள விரும்பாமல், தான் நாலாயிரம் ரூபாய்கடன் கொடுப்பதாகவும், அதைக்கொண்டு ஒரு மோட்டார் பஸ் வாங்கி வாடகைக்கு ஓட்டும்படியாகவும் தெரிவித்தார். எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத உதவி கிடைத்ததைக்கண்டு மகிழ்ந்த துரைசாமி, உடனே அதற்குடன் பட்டார்.

## மோட்டார் ஓட்டி—முதலாளி

துரைசாமி ஸ்டேன்ஸ் துரையின் உதவியால் ஒரு மோட்டார் பஸ் வாங்கினார். கோவைப் பிரமுகர் திவான்பகதூர் சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் அறிவுரை, 'எந்தத் தொழிலாயிருந்தாலும் பாதியை முதலுக்குப் போட்டுவிட்டு, பாதியை அந்த முதல் பாதுகாப்புக்காகக் கையில் வைத்துக்கொள்ள வேண்டும்' என்பது. இதை இனியேனும் கடைப்பிடிக்கவேண்டுமென்று நினைத்த துரைசாமி, மேலும் முயன்று நாலாயிரம் ரூபாய் கடன் பெற்று வைத்திருந்தார்.

இவ்வாறாகத் துரைசாமியின் வருங்காலப் பெருவாழ்வு 1920-ம் ஆண்டில் உறுதியான அடிப்படையில் தொடங்கியது. பழனிக்கும் பொள்ளாச்சிக்கும் இடையில் நாற்பது மைல்கள். இதில்தான் துரைசாமியின் முதல் பஸ் வெற்றி வீறுடன் தன் சக்கரங்களைச் சுழற்றிச் சென்றது. மோட்டார் ஓட்டி யார்? துரைசாமிதான்! முதலாளியும் துரைசாமிதான்! முதலாளி தொழிலாளி என்னும் இரண்டு உரிமை

களும் இருந்தாலும் இரண்டு வாழைப்பழமும் அரைக்கால் படி பாலுமே துரைசாமியின் இரவு உணவு. 'ஐந்தணு செலவில் அன்று என் வாழ்நாட்கள் சென்றன' என்கிருர், இன்று 'கோபால் பாக்' மாளிகையின் உரிமையாளர் ஜி. டி. நாயுடு.

### தொழில் வளர்ச்சி

ஒற்றை வண்டியுடன் தொடங்கிய மோட்டார் போக்கு வரத்துத் தொழில், நாளடைவில் வளரலாயிற்று. கிடைத்த வருமானத்தை வீண்படுத்தாமல் சிக்கன முறையைக் கையாண்டு உழைத்ததால், ஆண்டுதோறும் புதிய புதிய பஸ்களை வாங்கிச் சேர்த்தார் துரைசாமி. பத்தாண்டுகளுக்குள் மோட்டார் தொழில் மிகப் பெரிய அளவில் வளர்ந்து பெருகியது. ஏறக்குறைய நூறு பஸ்கள் எழுபது நகரங்களுக்குப் பிரயாணிகளைச் சுமந்தோடிப் பரிமாறின. நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றினர். பல்லாயிரக்கணக்கான ரூபாய் வருமானமேற்பட்டது. இவ்வளவையும் துரைசாமி மிகத் திறமையுடன் நிர்வகித்தார். இம்முன்னேற்றத்திற்குக் காரணம், துரைசாமியின் ஊன்றிய சிந்தையும் உலையா முயற்சியும் உயர்ந்த அறிவுமே என்பதைக் கூறவும் வேண்டுமோ? என்னே ஊக்கத்தின் உயர்வு!

## 2. கூட்டுறவு சாதனை

### தொழிலில் போட்டி

ஒருவர் ஒரு துறையில் முயன்று வெற்றியடைந்தால் மற்றவர்களும் அத்துறையில் இறங்கிப் பொருள் தேடலாமென்று ஆவல் கொள்வது பெரும்பாலோ

ருடைய இயல்பு! புதிய துறையில் புதிய தொழிலை மேற்கொண்டு முன்னேற வேண்டுமென்ற அறிவும் திறமையும் பலருக்கு இல்லையென்றே சொல்லலாம். துரைசாமி, மோட்டார் தொழிலில் பிறைமதிபோல வளர்ந்து செல்வங் கொழிப்பதைக் கண்டால் செல்வர்கள் வாளா இருப்பார்களா? பல மோட்டார் கம்பெனிகள் தோன்றிப் போட்டியிடலாயின. துரைசாமி இப்போட்டியைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் தன் தொழிலைத் திறமையுடன் நடத்தலானார்.

### உயர்ந்த குறிக்கோள்

துரைசாமி, மோட்டார் தொழிலில் உயர்ந்த குறிக்கோளுடன் இருந்தார். இயன்றவரையில் பயணத்தை வசதியும் சிக்கனமும் உடையதாகச் செய்வதில் கருத்துக் கொண்டிருந்தார். பொதுமக்களின் நம்பிக்கை, அன்பு, மதிப்பு, ஆதரவு இவைகளைப் பெறுவதில் துரைசாமி கண்ணுங் கருத்துமாயிருந்து முயன்றார். குறித்தநேரத்தில் பஸ் புறப்படல், குறித்த நேரத்தில் அடையவேண்டிய இடத்தைச் சேர்தல், பணியாளர்கள் பிரயாணிகளிடம் மரியாதையாக நடந்துகொள்ளுதல், தங்க இடவசதி முதலியவை ஒழுங்காயிருக்கும்படி செய்து புகழ்பெற்றார்.

### போட்டியாளர் நோக்கம்

ஆனால், போட்டியிட்டவர்களோ மோட்டார் தொழிலில் பெரும் பொருள் தேடவேண்டுமென்ற ஒரே நோக்குடன் இருந்தனர். அதனால், மோட்டார் போக்குவரத்தில் ஒழுங்கீனங்கள் மலிந்திருந்தாலும் அவற்றை நோக்குவதில்லை. இதனால் நாளடைவில்

போட்டியாளர்களில் பெரும்பாலோர் தொழிலில் தோல்வியடைந்து பொருளழிவு ஏற்பட்டு மனந் தளர்ந்து நின்றூர்கள். பொருளிருந்தால் மட்டும் போதுமா? தொழில் நடத்துதற்குரிய அறிவும் திறமையும் வேண்டுமன்றே?

### கூட்டுறவு முயற்சி

துரைசாமி கூட்டுறவு முறையில் பெரிதும் ஆர்வ முடையவர். 'போட்டியிடுவதால் நன்மை ஏற்படாது; தொழில் வளர்ச்சியும் தோன்றது' என்பதை நன்கறிந்திருந்தார். ஆகையால் தளர்ச்சியடைந்த போட்டிக் கம்பெனியாளர்களை யணுகி, கூட்டுறவு முறையின் நன்மையை எடுத்துக்கூறி யாவரும் ஒன்ருக இணைவதற்கு முயன்ருர். முயற்சி வீண்போகவில்லை. சிதறிக்கிடந்த பன்னிரண்டு கம்பெனிகளை 1930-ல் ஒன்ருக இணைத்தார். எல்லோருடைய விருப்பத்தின்படி முழு நிர்வாகப் பொறுப்பையும் துரைசாமியே ஏற்றுக்கொண்டார்.

### 'யுனைடெட் மோட்டார் சர்வீஸ்'

ஒன்ருக இணைக்கப்பட்ட கம்பெனிகள் 'யுனைடெட் மோட்டார் சர்வீஸ்' (United Motors Service) என்னும் புதிய பெயரில் ஒளிபெற்று நடைபெறத் தொடங்கின. இப்பொழுது கோவையிலிருந்து புறப்பட்டுச்சென்று திரும்பும் 200 பஸ்கள் ஒற்றுமைச் சங்கிலியில் பிணைக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு 500 தடவைகள் பஸ் போக்குவரத்து நடைபெற்றது; 15000 பிரயாணிகள் பிரயாணம் செய்தனர்; 1500 மைல் மொத்த நடமாட்டம் ஏற்பட்டது. கோவை,

நீலகிரி, மலையாளம், மதுரை, கொச்சி ஆகிய இடங்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ்ப் போக்குவரத்து வசதிகளைப்பெற்றன. ஏறக்குறைய ஆயிரம் பேர் வேலை செய்தனர்; மாதந்தோறும் பதினேழாயிரம் ரூபாய் வரை ஊதியம் பெற்றனர். பத்திலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசியலார் ஆண்டு தோறும் பலவகை வரிகளின் வாயிலாகப் பெறும் தொகை ஐந்திலட்சம் ரூபாய்க்கு மேல்!

## 3. நிர்வாகத்திறமை

### நிர்வாகப் பொறுப்பு

சாதாரண மோட்டார் பஸ் ஓட்டியாகத் தொழில் புரியத்தொடங்கிய துரைசாமி, யூ. எம். எஸ். என்னும் பெரிய நிர்வாகத்தின் பொறுப்பாளராக மிளிரும் மிகவுயரிய நிலைமை யெய்தி, யாவரும் ஜி டி. நாயுடு என்று மரியாதையாகக் குறிக்கும் பெருமை பெற்றார். இருநூற்றுக்கு மேற்பட்ட பஸ் போக்குவரத்து நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்துவதென்றால், அது எளிதானதா? ஆனால், நாயுடு பெரிய பொறுப்பைக்கண்டு மனங்கலங்காமல் முன்னிலும் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் செயல் புரியலானார். நிகரற்ற மூளைவன்மையும் வியக்கத்தக்க செயலாற்றலுமுடைய நாயுடு, இந் நிர்வாகத்தைப் பெரிய சுமையாகக் கருதவில்லை.

பொறுப்பு மிகுதியாய்விடவே நிர்வாக முறைகளில் பல சிறந்த மாறுதல்களைச் செய்தார். அலுவல்களின் தன்மைக்குத் தகுந்தபடி தனித்தனி இலாகாக்களாகப் பிரித்து ஒவ்வொரு இலாகாவுக்கும் பொறுப்

பாளர்களை ஏற்படுத்தினர். இதனால் எல்லாச் செயல்களும் தெளிவாகவும் திட்டமாகவும் விரைவாகவும் நடைபெறலாயின. எல்லாப் பொறுப்பாளர்களுக்கும் தலைமைப் பொறுப்பாளராக நாயுடு விளங்கினர். ஆகையால் நிர்வாக இயந்திரத்தின் தலைமைச் சுக்கான் நாயுடு கையிலேயே இருந்தது.

### பஸ் போக்குவரத்தில் சீர்திருத்தம்

பஸ் போக்குவரத்தில் சென்னை மாகாணமே கண்டு வியக்கும்படியான சிறந்த ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தினர், நாயுடு. நேரந்தவறாமல் புறப்படுதல், குறித்த நேரந்தவறாமல் ஒவ்வொரு இடத்தையும் அடைந்து திரும்புதல் வேண்டும் என்பதில் நாயுடு மிகுந்த அக்கறை காட்டி, அதை நடைமுறையில் வெற்றிபெறச் செய்தார். பஸ்ஸில் பணி புரிவோர் பிரயாணிகளிடம் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்துகொள்ளவும், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளாமலும், மோட்டாரை மிக விரைவாக ஓட்டிப் பிரயாணிகளை நிலை கலக்கித் துன்புறச் செய்யாமலும், புகை பிடித்தலால் ஏனையோருக்கு இடையூறு விளைவிக்காமலுமிருக்கும்படி இன்னும் எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்தார் நாயுடு. இவைகளெல்லாம் சரியாய் நடைபெறுகின்றனவா என்பதை நேரில் அறிய நாயுடுவே யாரும் அறியாதவகையில் ஒரு பிரயாணிபோல் பஸ்ஸில் ஏறிக் குற்றம் நிகழுமாறு செய்து தன் பணியாளர்களைப் பரிசோதித்துத் திருத்தியிருக்கிறர். இவற்றால், நாயுடு ஒழுங்குமுறையில் பெருங் கருத்துடையவர் என்பது நன்கு விளங்குகிறதல்லவா? ஆகவே, இந்தியா

முழுவதும் மிகக் குறைந்த பஸ் விபத்துக்களுடையது யூ. எம். எஸ். நிலையந்தான் என்றும், காலந்தவருமல் பஸ் ஓடிய பெருமையும் இதற்கே தனியுரிமை என்றும் ஏற்பட்டதில் வியப்பில்லையல்லவா?

## பாராட்டுரை

ஜி. டி. நாயுடு அவர்களின் நிர்வாகத் திறமையைக் குறித்து திரு. பத்திரிராவ் என்பவர் எழுதிய 'ரோட் - ரயில் போக்குவரத்து' என்னும் நூலில், 'சமுதாயப் பொருளாதார நலன்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த முறையிலும், வசதிகளுடனும் போக்குவரத்துச் சாதனங்களை உதவிவரும் யூ. எம். எஸ். நிலையம் பாராட்டக்கூடியது' என்று குறிப்பிட்டிருக்கிறார். பொருளாதாரப் பேரறிஞராகிய டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள், 'யூ. எம். எஸ். நிலையம் அளவில்லாத ஆர்வமுடைய ஒருவரை நிர்வாகத் தலைவராகப் பெற்றிருக்கும் பேறு பெற்றுள்ளது' என்று உவகையுடன் போற்றியிருக்கிறார். இத்தகைய பாராட்டுரைகள் ஏராளம்.

## 4. தொழில் நிலையங்கள்

### மோட்டார் கலைக்கூடம்

மோட்டார் போக்குவரத்துத் தொழில் வளர்ச்சியடைந்த தொடக்க நாளிலேயே, நாயுடு, மோட்டார் கலைக்கூடம் (Work Shop) ஒன்று அமைத்தார். இதில் மோட்டார் சம்பந்தமான நுண்ணிய பாகங்களைப் பழுது பார்த்தல், திருத்தியமைத்தல் முதலிய வேலைகள் நடைபெறுகின்றன. நாலாயிரம் ரூபாயில் தொடங்கப்பெற்ற இக் கலைக் கூடத்தில், யூ. எம்.




யூ. எம். எஸ். நிலையம்

எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த மோட்டார் ஓட்டிகளில் பலர் 'மெக்காலிக்' காக மேன்மையுற்றுத் திறமையாகப் பணி புரிகின்றனர். நாயுடுவே கருவிகளின் நுட்பங்களை யறிந்து திறமையுடன் பழுது பார்த்துத் திருத்தி யமைக்கும் செயலில் ஈடுபடுவாராதலால், இவருடைய கண் காணிப்பினுலும் அறிவுரைகளாலும் சாதாரண மோட்டார் ஓட்டிகள் பொறி வல்லுநர்களாகத் திகழ்ந்ததில் வியப்பில்லை யல்லவா? இந் நிலையம் தொடக்கத்தில் வாடகை யிடத்திலிருந்தது; பின்னர், சொந்த இடத்தில் இணைக்கப்பட்டு விரிவடைந்திருக்கிறது.

## யூ. எம். எஸ். நடு நிலையம்

கோவையில் அமைக்கப்பட்டிருக்கும் யூ. எம். எஸ். நடு நிலையம் (U. M. S. Central Station) யாவரும் சென்று பார்க்கத் தகுந்த சிறப்புடையது. இது 1942-ல் உருவாகியது. அப்பொழுது சென்னையில் கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹோப் துரை இந் நிலையத்தைத் திறந்து வைத்தார். இது, நிலம் கட்டிடம், தளவாடப் பொருள்கள் முதலிய யாவும் சேர்த்து ஏறக்குறைய நான்கு இலட்சம் ரூபாய் மதிப்புடையது. புகைவண்டி நிலையங்களிலும் காணமுடியாத சுகாகார முறைகள், நிர்வாக ஏற்பாடுகள், பிரயாணிக்ளுக்குரிய வசதிகள், அலுவலக அமைப்பு முதலியவை வியக்கத்தக்கபடி அமெரிக்க நாட்டு முறையில் உள்ளன. இதனுள் நுழைந்து பார்ப்போர், தாம் இந்தியாவில் இருக்கிறேம் என்பதையே மறந்து அமெரிக்காவில் இருக்கிறேம் என்றே நினைக்கும்படி பலவகைக் காட்சிகள் உள்ளத்தைக் கவரும்.

**நிலையக் காட்சிகள்**

மோட்டார் வண்டிகளை நிறுத்திப் பிரயாணிகளை ஏற்றுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் மிகத் தூய்மையான பெரிய முற்றம், வாயிலில் இருக்கிறது. அருகில் பஸ்கள் வரும்—புறப்படும் காலங்களைக் காட்டும் புதுமைக் கருவி இருக்கிறது. அடுத்து, தானே கணக்குப் போட்டு நமக்குப் பயணச்சீட்டு (Ticket) தரும் வியப்பூட்டும் கருவியுள்ளது. பிரயாணிகள் தங்கியிருப்பதற்குரிய கூடம் மிகச் சிறந்த ஏற்பாடுகளுடன் கூடியது. இங்குள்ள அறைகளில் பிரயாணிகள் இன்பமாய்த் தங்கியிருக்கும்படி மேனாட்டு முறையில் எல்லா வசதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டிய செய்திகளை அறிந்து கொள்ளுவதற்கு ஓர் அறையிருக்கிறது. இதில் ஒரு அலுவலாளர் இருக்கிறார். பிரயாணிகள் அறிந்து கொள்ள விரும்பும் செய்திகளை உடனுக்குடன் மலர்ந்த முகத்துடன் தெரிவிக்கிறார். இப் பொறுப்பில் பெரும்பாலும் பெண்களே இருக்கிறார்கள்.

இங்கே கண்காட்சி சாலை ஒன்று இருக்கிறது. மோட்டார் வண்டி சம்பந்தமான கலை நுணுக்கங்கள் பலவற்றைப் புள்ளி விவரங்களாகவும், இயந்திரப் பகுதி விளக்கங்களாகவும் ஒவ்வொருவரும் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நாயுடுவின் பரந்த நோக்கமே இவ்வேற்பாட்டிற்குக் காரணம். இங்கு, பிரயாணிகள் வானொலி கேட்டு மகிழவும் ஒலிப் பெட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

நிலையத்தின் பிரிவுகள்

பரந்த இந் நிலையத்தின் தொழிற் பிரிவுகளை நாயுடுவே, நிலையத் திறப்பு விழா சொற்பொழிவில் விளக்கிக் கூறியிருக்கிறார்: 'இந் நிலையம் பல்வேறு தொழிற் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. 33 பகுதிகளுடன் கூடிய ஒரு பஸ் ஸ்டாண்டு; தரையில் 42 பகுதிகளும், மாடியில் 20 பகுதிகளும் கொண்ட நிர்வாக அலுவற் கூடங்களின் கட்டிடம்; 20 பகுதிகளுடைய பாதுகாப்பு வேலைக்கான இடம்; 12பகுதிகளுடைய சீர்திருத்த வேலைக்கான அமைப்பு; எண்ணெய் ஊற்றவும், கரிபோடவும் 8 பகுதிகள்; ஆக 135 பிரிவுகளை இந் நிலையம் பெற்றிருக்கிறது. ஓரிலட்சத்துப் பதினெண்ணாயிரம் சதுர அடிகள் கொண்ட நிலப்பரப்பில் இது அமைக்கப்பட்டிருக்கிறது.'

பல்லடம் சந்திப்பு

பிரயாணிகளின் வசதிக்கென, பல்லடம் என்னும் இடத்தில் பஸ் சந்திப்பு (Bus Junction) கட்டிடம் ஒன்றை, நாயுடு கட்டியிருக்கிறார். இது இந்தியாவில் எங்குமே காணாத புதுமை பொருந்திய அமைப்பு. இதைக் காண்போர் நாயுடுவின் அளவிறந்த துணிவை யெண்ணிப் பாராட்டுவார்கள். இதைக் கட்டுவதற்கு இலட்சம் ரூபாய்களுக்குமேல் செலவாயிருக்கிறது. பிரயாணிகள் தங்கவும் உணவு கொள்ளவும், பயணச் சீட்டு வாங்கவும், வண்டிகள் வந்து நிற்கவும், பழுதுபார்த்துப் புறப்படவும் மிகச் சிறந்த ஏற்பாடுகள் இச் சந்திப்பில் உண்டு. இதைச் சென்னை அரசியல் செயலாளராயிருந்த திரு ஜி. டி. போக் துரை அவர்கள் திறந்து வைத்தார்.

## 5. மோட்டார் மன்னன்

**'கோபால் பாக்'**

கோவை அவிஞசி ரோட்டில் 'கோபால் பாக்' என்னும் பெயருடன் மிளிர்கிறது, நாயுடு அவர்களின் மாளிகை. இது பெரும்பாலும் அமெரிக்க முறையில் புதுமைக் கவர்ச்சியுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. நாயுடு, அமெரிக்கா முதலிய மேனுடுகளில் சுற்றுப் பயணம் செய்துவந்த காரணத்தால், அந் நாட்டு நல்ல பழக்க வழக்கங்களைப் பெரும்பாலும் மேற்கொண்டிருந்தார். ஆகையால் இவருடைய இருப்பிடம் அம் முறைப்படி இருப்பதில் வியப்பில்லை. இத்தகைய சிறந்த மாளிகைக்குத் தமது தந்தையின் பெயரை இட்டிருப்பதிலிருந்து, இவருக்குத் தந்தையிடமுள்ள பேரன்பும், நன்றியுணர்வும் நன்கு விளங்குகின்றன அல்லவா ?

**மாளிகையின் அமைப்பு**

மாளிகையினுள் நுழைந்தால், அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் 'வெள்ளை மாளிகை' என்கிருர்களே, அதுபோல, தூய வெண்ணிறக் காட்சியே எங்கும் ஒளிவீசும். அங்குப் பத்துத் தொழிற் பிரிவுகளைக் கொண்ட 'பிளாக்' இருக்கிறது. அம் மாளிகையின் பரப்பளவு முழுவதும் 'சிமெண்டு' போடப்பட்டு எங்கும் தூய்மையாய்க் காணப்படும். உணவுக் கூடம், ஆங்கில மருத்துவ நிலையத்தையே நினைவுறுத்தும். சுவரில் கை வைத்தால் தண்ணீர், வெந்நீர், 'சோப்', பக்கத்தில் கை துடைக்கத் துண்டுகள் யாவும் தயாராய் இருக்கும். மேனுட்டு முறையைத் தழுவி மின்சாரக் கம்பிகள் தரையின்கீழ் அமைக்கப்

பட்டிருக்கின்றன. ஒரு கூடம் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் நீளம் 370 அடி; அகலம் 75 அடி. காலை முதல் மாலை வரையில் அக்கூடத்தில் எப்பக்கமும் நிழல் விழாது; எதிரொலியோ, பிற தொந்தரவுகளோ இல்லாமலிருக்கும். சுவரின் ஒரு புறத்தில் மக்களுக்குச் சராசரி வேண்டிய உணவுச் சத்துப் பொருள் விளக்கப் பலகைகள் தொங்கும். இவ்வாறு நாயுடு தனது அலுவலகம், இருப்பிடம் ஆகிய இரண்டையும் பொறுத்தமட்டில் அமெரிக்காவையே கோவைக்குக் கொண்டு வந்திருக்கிறார் என்று சொல்லலாம். இம் மாளிகையைச் சுற்றிலுமுள்ள பரந்த இடத்தில் மரம் செடி கொடிகள் அழகிய காட்சியை அளிக்கின்றன.

**பேட்டி காணல்**

ஜி. டி. நாயுடு அவர்களைப் பேட்டி கண்டு பேச வேண்டுமென்றால் அனுமதிபெற்றே உள்ளே போக வேண்டும். வாயிற்காவலன், அலுவலக உள் அறையிலிருக்கும் நாயுடுவினிடம் டெலிபோனில் பேசி அனுமதி பெற்ற பின்னரே உள்ளே அனுப்பிவைப்பான்.

**நாயுடுவின் அலுவல்**

உள்ளே சென்றால் மெலிந்த உருவத் தோற்றமுடைய நாயுடு புன்முறுவலுடன் வரவேற்பார். வந்தவர்களை இருக்கையில் அமரச் செய்து, பேச வேண்டியவற்றைப் பேசிக்கொண்டே 'பைல்' களைப் புரட்டித் தனது அலுவல்களையும் பார்ப்பார். இடையிடையே, முன்னும் பின்னுமிருக்கும் டெலிபோன் கருவிகளின் வாயிலாகத் தனது நிர்வாகத்திற்குரிய இடங்களிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் வரும்

செய்திகளைக் கேட்டறிந்து அவற்றிற்குத் தேவையான செய்திகளைத் தெரிவிப்பார். இன்னும் நடுவில் அலுவலகச் செயல் புரிவோர் கையெழுத்துக்காக 'டைப்' செய்த தாள்களைக் கொண்டுவந்து மேசை மீது வைத்துவிட்டு நிற்பர். காலத்தை வீணாக்காமல் அத்தாள்களைப் பார்வையிட்டுக் கையெழுத்தையும் போட்டுக்கொண்டே வந்தவருடனும் பேசுவார். நாயுடு பல வேலைகளிலும் அறிவைச் செலுத்திக் கலக்கமின்றி இடையறுமல் வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டும், ஒரு நாளில் 20 மணி நேரங்கள் வேலையில் ஈடுபட்டு அலுப்பின்றியிருப்பதைப் பார்த்தும் வந்தவர்கள் வியப்படைவார்கள்.

**உலகோர் கவனம்**

நாயுடு அவர்களின் பெயரும், அவருடைய மோட்டார் தொழிலும் உலகோர் கவனத்தைக் கவர்ந்தன. வெளிநாட்டுத் தொழில் வல்லுநர்கள் இந்தியாவுக்கு வந்தால் நாயுடுவையும் அவருடைய நிலையங்களையும் பார்க்காமல் திரும்புவதில்லை. உள்நாட்டுத் தொழில் முதலாளிகள், அரசியல் தலைவர்கள், பத்திரிகாசிரியர்கள் முதலியவர்கள் நாயுடுவைப் பேட்டிக் கண்டு பேசுவதைப் பெரும் பேருகக் கருதுகிருர்கள். வடநாட்டு வணிக மன்னரான திரு. ஜி. டி. பிர்லா அவர்களும் தொழில் நிலையம் ஏற்படுத்துவது குறித்து நாயுடுவைக் கண்டு பேசி இவருடைய அரிய கருத்துக்களையறிந்து போயிருக்கிருரென்ருல், நாயுடுவின் தொழில் மேதையைப் பற்றிக் குறிக்கவும் வேண்டுமோ? இத்தகைய திறமையாளரை 'மோட்டார் மன்னன்' என்று பிறர் போற்றுவதில் வியப்பென்ன இருக்கிறது?

# III. உலகப் பயணம்

## 1. முதற் பயணம்

### அறிஞர் நாயுடு

இருபது வயது வரையில் கோவை மாவட்டத்தைக் கூடப் பார்த்தறியாமலிருந்த ஜி. டி. நாயுடு அவர்கள், இப்பொழுது உலக முழுவதும் சுற்றிப் பார்த்துப் பல செய்திகளையும் நேரிலறிந்த மேதையாக விளங்குகிறார். பள்ளிக்கூடத்தில் படித்தறியாத இவர், அருமையான ஆங்கில அறிவுடன் இயந்திர நுட்பங்களைப் பற்றிய அருங்கலை யறிவும் கைவரப் பெற்று விளங்குவது விந்தையினும் விந்தை. கருவிலே திருவுடையார்க்கு ஆழ்ந்த அறிவே ஆசானாகவும், பரந்த வுலகமே பள்ளிச் சாலையாகவும் விளங்குகின்றன என்பதற்கு, நாயுடு சிறந்த சான்றாகத் திகழ்கிறார்.

### பயணத்திற்குக் காரணம்

நாயுடு மேனாட்டுப் பயணம் செய்ய விரும்பியதற்குக் காரணம், எதிர்பாராத ஒரு நிகழ்ச்சிதான். 1929-ல் ஜெர்மானிய வணிகர் ஒருவர் தமது மனைவியுடன் இந்தியா முழுவதும் சுற்றிவிட்டு, கோவைக்கு வந்தபொழுது அவரது உடல் நலம் கெட்டிருந்தது. அதனால், அவர் யூ. எம். எஸ். பிரயாணிகள் தங்கும் அறைகளில் தங்கி, இரவைக் கழித்தார். இதையறிந்த நாயுடு அன்புடன் அங்குச் சென்று அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்தார். எதிர்பாராத இந்த அன்புச் செயலைக்கண்ட ஜெர்மானியர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இதனால், இருவரும் நண்பராயினர். அவர் அவ்விடத்திலிருந்து புறப்படும்

பொழுது ‘நீங்கள் ஒருமுறை எங்கள் விருந்ினராக எங்கள் நாட்டுக்கு வரவேண்டும்’ என்று அன்புடன் சொல்லிவிட்டுப் போனர். அவர் தம் நாட்டை யடைந்ததும் மறவாமல் தன் நாட்டுக்கு வரும்படி நாயுடுவுக்குப் பலமுறை கடிதம் எழுதி வற்புறுத்தினர். ஆகையால், ஜெர்மானிய நண்பரின் அன்பழைப்பை நாயுடு விருப்புடன் ஏற்று மேனுட்டுப் பயணம் செய்ய உறுதிகொண்டார்.

**கப்பலில் ஆபத்து**

நாயுடு 1932-ல் ஐரோப்பா செல்லப் புறப்பட்டார். கொழும்புத் துறைமுகத்திலிருந்து ‘ஜார்ஜ் பிலிப்பர்’ என்ற பிரஞ்சுக் கப்பலில் நாயுடுவின் மேனுட்டுப் பயணம் தொடங்கியது. நாயுடுவுடன் இரண்டு நண்பர்களும் இருந்தார்கள். நான்கு நாட்கள் கொந்தளிப்பான கடலில் கப்பல் சென்றுகொண்டிருந்தது. ஐந்தாம் நாள் காலையில் நடுக் கடலில் கப்பல் தீப்பிடித்துக் கொண்டது. பிரயாணிகள் நிலைகுலைந்து உயிர்தப்ப முயன்று கொண்டிருந்தார்கள். பலர் கடலுக்கு இரையாயினர். நாயுடு நண்பர்களைத் தேடினர். அவர்கள், ‘லைப் போட்’ (Life boat) ஒன்றில் நலமே ஏறிவிட்டதை யறிந்ததும், நாயுடு நீரில் குதித்து ஒரு படகில் ஏறிக்கொண்டார். இச்சமயம் ஆங்கில மாது, சைனப் பெண் ஆகிய இருவரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் நாயுடுவுக்கு ஏற்பட்டது. பிறகு ‘டிஜி பௌட்டி’ (Diji Bouti) என்ற இரஷ்ய எண்ணெய்க் கப்பல் ஒன்றின் உதவியால் இவர்கள் உயிர் பிழைத்துக் கரைசேர்ந்தனர்.

**நண்பரைக் கண்டு மகிழ்தல்**

ஆபத்தைக்கண்டு நாயுடு அஞ்சவில்லை; மேலும் பயணத்தைத் தொடங்கினர். மார்ஸேல்ஸ் என்னும் நகரத்தை யடைந்ததும் நாயுடு ஜெர்மனியிலுள்ள ஹனேவர் என்னும் நகரத்திற்குச் சென்று, தன்னை யழைத்திருந்த சூவென்ஸ் என்னும் நண்பரின் இருப்பிடத்தை யடைந்தார். அந்நண்பர் நாயுடுவை மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தார். அங்கு இரண்டொரு நாட்கள் நண்பருடன் அளவளாவி யிருந்தார் நாயுடு

**ஐரோப்பிய நாடுகளைக் காணல்**

ஜெர்மனியிலிருந்து புறப்பட்ட நாயுடு, இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகள் பலவற்றைக் கண்டு களித்தார். கப்பல் விபத்தைக் கடந்த நாயுடுவுக்கு இலண்டன் நகரில் இரயில் விபத்து ஒன்றும் ஏற்பட விருந்தது. ஆனல், நல்லவேளையாக விபத்துக்குள்ளான இரயிலுக்குப் பயணச்சீட்டு வாங்கியிருந்த நாயுடு, அதற்குமுன் புறப்பட்ட இரயிலில் ஏறி இலண்டன் நகரை யடைந்துவிட்டார்!

**அமெரிக்கா செல்லல்**

ஐரோப்பாவைச் சுற்றிப் பார்த்தபிறகு, நாயுடு அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு, மோட்டார் சம்பந்தமான தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார்; நிபுணர்களைக் கண்டு பேசினர்; தன்னுடன் கொண்டு வந்திருந்த சில விவரங்கள் அடங்கிய தாள்கள், சில பொருள்கள் யாவும் கப்பல் தீ விபத்தில் அழிந்து விட்டதால், நாயுடு திட்டமான ஏற்பாடுகளுடன் எதையும் செய்ய முடியாமற் போய்விட்டது.

## கீழ் நாடுகளைக் கண்டு திரும்பல்

நாயுடு அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு, ஜப்பான், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனா, இந்தோசைனா, மலாயா முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்று பார்வையிட்டார். ஜப்பான் தலைநகரான டோக்கியோவிலிருந்து கொரியாவுக்கு வானவூர்தியிலேறிப் பயணம்செய்ய நேரிட்டது. ஊர்தி, கடலுக்கு மேல் பறந்து செல்லும்பொழுது சூறுவளி கொடுமையாக ஊர்தியைத் தாக்கி அலைக்கழித்தது. ஆயினும் ஊர்தி பாதுகாப்பாக நிலையத்தைச் சேர்ந்தது. பின்னர், பீக்கிங் நகரிலிருந்து கோபி பாலைவனத்தைக் கடந்து, வரலாற்றுப் பெருமையுள்ள பெரிய மதிற்சுவரைப் (Great Wall) பார்த்துவிட்டு மங்கோலியாவை நோக்கிச் செல்லுகையில் கொள்ளைக்கூட்டம் மறித்தது. நாயுடுவின் தோற்றமோ என்னவோ, அவர்கள் ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டனர். இங்ஙனம் கப்பல், இரயில், வானவூர்தி விபத்துக்களில் தப்பிய தென்னிந்தியத் தொழில் விஞ்ஞானி, சைனா நாட்டுக் கொள்ளைக் கூட்டத்தாரிடமிருந்தும் தப்பினார்.

## பயணத்தின் பயன்

இந்த முதற் பயணத்தில் நாயுடு, ஒவ்வொரு நாட்டிலும் மோட்டார் உற்பத்தி, போக்குவரத்து ஏற்பாடுகள் ஆகியவை பற்றிய அனுபவங்களைத் தேடியடைவதையே முதல் வேலையாகக் கொண்டிருந்தார். மக்கள் நெருக்கமுள்ள நகரங்களுக்குச் செல்வதையும், ஆங்காங்குள்ள தொழிற்சாலைகள், தொழில் நிபுணர்களைக் காண்பதையும் வல்லுநர்

களுடன் பேசிப் புதிய நுட்பங்களை யறிவதையும் புதிய பொறிகளைக் கண்டுபிடித்திருக்கும் வல்லுநர்களைக் கண்டு அறிமுகம் செய்து கொள்வதையும் நாயுடு விரும்பி மேற்கொண்டார். இன்னும், அந்நாடுகளில் சில கூட்டங்களில் இந்தியாவைப்பற்றிப் பேசுவதும், பத்திரிகாசிரியர்களின் வினாக்களுக்கு விடையளிப்பதும் நாயுடுவின் இனிய பொழுது போக்கா யிருந்தன.

## தாயகம் சேர்தல்

இத்தகைய பல அனுபவங்களுடன் முதல் உலகப் பயணம் செய்த நாயுடு, ஓராண்டுக்குப் பின்னர் 1933-ம் ஆண்டுக் கடைசியில் கொழும்பு வழியாகத் தாயகம் திரும்பினார். நாயுடு புறப்பட்டபொழுது பொருட்படுத்தாமலிருந்த பத்திரிகைகள், இவரது திறமையை மேனாட்டின் வாயிலாக வுணர்ந்து வானளாவப் புகழ்ந்து வரவேற்புரைகள் கூறின! மேனாட்டார் புகழ்ந்த பிறகே நம் நாட்டின் பெருமையை நாம் உணரும் சிறுமை என்று நீங்குமோ?

'உலகச் சுற்றுப் பயணம் மனிதனது அறிவை விரிவடையச் செய்து வளர்ப்பதுடன், வாழ்நாளில், தேவையான உண்மைகளையும் அறிய உதவுகிறது' என்கிறார், உலகம் சுற்றிய நாயுடு. இது அனுபவ மொழி என்பதில் தடையுண்டோ?

## வரவேற்பு—புகழ்மாலை

மேனாடுகள் சுற்றித் தாய்நாடடைந்த நாயுடுவை வரவேற்கச் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. சில தலைவர்களும் நண்பர்களும் ஆர்வம் மிக்க இளை

ஞர்களும் இந்த ஏற்பாட்டில் மிக விருப்புடன் கலந்துகொண்டு முனைந்திருந்தார்கள். இவர்கள், நாயுடு கொழும்பில் இருக்கும்பொழுதே இவரை வாழ்த்தியும் வரவேற்றும் தந்திச்செய்தி அனுப்பினார்கள்; சென்னையில் நடைபெற விருக்கும் பாராட்டு விருந்துக் கூட்டத்திற் கலந்துகொள்ள அழைப்பும் அனுப்பினார்கள். நாயுடு, பாராட்டுதலை விரும்புபவரல்லர். ஆயினும், அன்பர்களின் விருப்பத்திற்கிசைந்து பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அதில், நாயுடு சுமக்கமுடியாத பூமாலைகளையும், புகழ் மாலைகளையும் புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டார். மறுநாள் கோவையை யடைந்தார்.

## 2. இரண்டாம் பயணம்

**காரணம்**

ஊர் சுற்றிய பறவை கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்க விரும்புமா? இரண்டாண்டுகள் கழிந்த பின்னர், மீண்டும் மேனாட்டுப் பயணம் செய்ய விரும்பினார். முன் பயணம் பல நாடுகளைக் கண்டு வியந்து களிக்கும் அளவிலேயே இருந்தது. மேலும் பல்வேறு நாடுகளில் அரைகுறையாய்க் கண்டறிந்த புதிய ஆராய்ச்சிகள் நாயுடுவின் மூளையைச் செல்லரித்துக் கொண்டிருந்தன. ஆகையால், மீண்டும் சென்று ஒவ்வொரு நாட்டிலுள்ள போக்குவரத்து ஏற்பாடுகள், மோட்டார் இயந்திரத் தொழில் வளர்ச்சி, இயந்திர நுட்பங்கள் முதலியவற்றை நேரில் பார்த்தறிந்து பயிலவேண்டுமென்ற ஆவல் துடிப்பு நாயுடுவை இரண்டாம் பயணத்திற்குத் தூண்டியது.

## நிர்வாக ஏற்பாடு

யூ. எம். எஸ். நிறுவனம் பெரிதும் வளர்ச்சியடைந்திருந்ததால், நிர்வாகப் பளு மிகுதியாய் இருந்தது. இலட்சக்கணக்கான பொருள் வருவாயுடைய இந்நிர்வாகத்தை நாயுடு ஒருவரே திறம்பட நடத்தி வந்தார். மேனாட்டுப் பயண ஆவல், பொருள் வருவாயையும் பொருட்படுத்தாமல் செய்துவிட்டது. ஆகையால் தனது நிர்வாகத்தை மூவரிடம் ஒப்படைத்தார். வெள்ளைக்காரப் பொறிவலாளர் (Engineer) ஒருவரைப் போக்கு வரத்துப் பொறுப்பாளர் (Trafic Manager) ஆகவும், சென்னை அரசாட்சியில் மாவட்டத் தலைவராகவிருந்த மற்றொருவரைப் பொதுச் செயலாளர் (General Manager) ஆகவும், பொள்ளாச்சி நகராட்சிக் கழகத் தலைவர் (Chairman) இராவ்பகதூர் எஸ். வி. நாயுடு அவர்களை முக்கியமான அலுவல்களை மேற்பார்க்கத் தன் சொந்தப் பிரதிநிதியாகவும் ஏற்படுத்தினார், நாயுடு.

## பயண, முன் ஏற்பாடு

நாயுடு, இம்முறை பயணம் செய்யவேண்டிய வகைகளை நன்காராய்ந்து வரையறை செய்து திட்டங்களை வகுத்துக் கொண்டார். பயணக் காட்சிகள் வீணாகிவிடாமலிருக்க இரண்டு பெரிய 'போட்டோ காமிராக்களை எடுத்துக் கொண்டார். ஒன்று, 16 M. M. அசைவுப் படம் (Movie) எடுப்பது; மற்றொன்று நிலைப்படம் (Still) எடுக்கக்கூடியது. இவற்றுடன் மேனாட்டு அரசாட்சி அலுவல் முறைகளை நேரில் பார்த்து அறிந்து கொள்வதென்ற ஒரு திட்டமும் இவரிடமிருந்தது.

### இலண்டனில்-தபால் இலாகா திறமை

1935-ம் ஆண்டில், நாயுடு பயணத்தைத் தொடங்கினர். இலண்டன் நகரம் சேர்ந்ததும், தனது திட்டத்துடன் தொழிற்சாலை முதலியவற்றைப் பார்வையிடலானர். இதற்கிடையில் பிரிட்டனின் தபால் இலாகா திறமையைச் சோதிக்க மனங்கொண்டார். உடனே. "ஜி. டி. நாயுடு, இலண்டன், W. C. I." என்று தனக்குத்தானே முகவரி எழுதி, ஒரு கடிதத்தைத் தபாற்பெட்டியில் போட்டார். என்ன வியப்பு! அவ்வளவு பெரிய நகரில் எப்படியோ நாயுடுவின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துவிட்டார், தபாற்காரர்!

### பஸ் தொழிலாளர் நாணயம்

மற்ருெரு சோதனை : நாயுடு தனது போட்டோ காமிராவை வேண்டுமென்றே ஒரு மோட்டார் பஸ்ஸில் வைத்துவிட்டு இறங்கி, 'இழந்த பொருள் அலுவலகம்' (Lost Property Office) சென்று எழுதி வைத்துவிட்டுத் தன்னிருப்பிடம் சேர்ந்தார். சில மணி நேரத்திற்குள் அது நாயுடுவிடம் சேர்க்கப்பட்டது!

### டெலிபோன் இலாகா சோதனை

இன்னொரு சோதனை : இந்தியாவிலுள்ள தன் கம்பெனித் தலைமைப் பொறுப்பாளருக்கு 'டிரங் டெலிபோன்' (Trunk Telephone) செய்ய விரும்பினர். ஐந்து நிமிடத்திற்குரிய கட்டணம் செலுத்திவிட்டு மூன்று நிமிடமே பேசினர். பிறகு, இரண்டு நிமிடத்திற்குரிய தொகையைத் திருப்பித் தரவேண்டு

மென்று நாயுடு வேண்டினர். அவ்வாறே இரண்டு பவுன் திரும்பக் கிடைத்தது. அதை, டெலிபோன் தொழிலாளர் திறமையைப் பாராட்டுதற்கு அறிகுறியாக அவர்களுடைய உதவிநிதிக்கு உடனே கொடுத்துவிட்டார்.

## உணவு விடுதி சோதனை

இலண்டன் உணவு விடுதியையும் சோதித்தார் நாயுடு. அங்குச் சிற்றுண்டி உண்பவர் தாமே உரிய தொகையைக் கொடுத்து விட்டுச் செல்வார்கள். உண்டவர்கள் தொகையைக் குறைத்துக் கொடுப்பார்களோ கொடுக்காமலேயே போவார்களோ என்ற ஐயம் சிறிதுமின்றி யிருக்கும் முதலாளிகளைக் கண்டு நாயுடு வியப்படைந்தார். ஆதலால், இரண்டு மூன்று முறை சிற்றுண்டி யுண்டபின் தொகை கொடுக்காமலே வெளியேறினர். யாரும் நாயுடுவைக் கேட்கவோ ஐயுறவோ இல்லை. ஆங்கில மக்கள் ஒருவரையொருவர் எவ்வளவு நம்புகிறார்கள் என்று வியப்புடன் எண்ணிய நாயுடு, மற்றோர் முறை சென்று முன் கொடுக்காது வந்த தொகையையும் சேர்த்துக் கொடுத்துவிட்டு வந்தார்.

## போலீஸாரிடம் சோதனை

இங்கிலாந்திலுள்ள, மக்கள் நடமாட்டம் மிகுந்த செல்டன் ஹாம் என்ற இடத்தில் நாயுடு நடந்து சென்றார். அங்கு ஓரிடத்தில் தன் கடமையை மேற்கொண்டிருந்த போலீஸ்காரரிடம் சென்று, "புகைவண்டி நிலையம் எங்கே இருக்கிறது?" என்று கேட்டார். போலீஸ்காரர், "சிறிது தூரம் சென்று இடப்

புறம் திரும்பிப் போங்கள்" என்று தெரிவித்தார். நாயுடு வேண்டுமென்றே சிறிதுதூரம் சென்று வலப் புறம் திரும்பிப் போகலானார். உடனே போலீஸ் காரர் ஓடிவந்து இவருடைய தோளைப் பிடித்து, "இப்புறம் போங்கள்" என்று இடப்புறத்தைக் காட்டிவிட்டுச் சென்றார். மற்றோர் சமயம் தமது கடமையிலிருந்த ஒரு போலீஸாரிடம் இருபத்தேழு நிமிடங்கள் வரையில் என்னென்னவோ விவரங்களைக் கேட்டார் நாயுடு. போலீஸார், சிறிதும் சினங் கொள்ளாமல் தமது கடமையைப் பார்த்துக் கொண்டே எல்லாவற்றிற்கும் பொறுமையாக விடையளித்தார். முடிவில் அன்பளிப்பாகச் சிறிது தொகையைக் கொடுத்தார் நாயுடு. போலீஸார் மறுத்தார். எவ்வளவு வற்புறுத்தியும் ஏற்றுக்கொள் ளாத போலீஸாரின் நேர்மையைக் கண்டு வியந்து திரும்பினார் நாயுடு.

**மருத்துவ நிலையத்தில் சோதனை**

இவ்வாறே இங்கிலாந்திலுள்ள மருத்துவ நிலை யத்தையும் நாயுடு சோதித்திருக்கிறார். ஒரு சமயம் இலண்டனிலுள்ள யூனிவர்சிடி மருத்துவக் கூடம் (University Hospital) சென்று சிகிச்சை செய்து கொண்டார். அப்பொழுது தனது உயர்நிலை, வரு மானம் ஆகியவற்றைத் தெரிவித்து அதற்கேற்றபடி கட்டணம் செலுத்தினார். மற்றோர் முறை செல்ல நேர்ந்தபொழுது தன்னை வருமானம் ஒன்றுமில்லாத எளியவர் என்று சொல்லிக்கொண்டார். மருத்துவ நிலையத்தில் கவனக்குறைவோ, மருத்துவம் செய்யும் முறையில் ஏற்றத்தாழ்வோ இருக்கின்றனவா என்

பதைக் கண்டறியவே இவ்வாறு சொன்னார். தன் சோதனையில், மருத்துவ நிலைய அலுவலாளர்கள், யாவரையும் சமமாகக் கருதி, அன்புடன் கவனித்துப் பணிபுரிவதைக் கண்டு வியப்பும் மகிழ்வுமடைந்தார், நாயுடு. மருத்துவம் செய்துகொண்டதற்குக் கட்டணம் செலுத்தாமலிருந்தது நாயுடுவின் உள்ளத்தை உறுத்தியதால், இன்னொரு முறை சென்று ஏதோ சிகிச்சை செய்துகொண்டு வட்டியும் முதலுமாகக் கட்டணத்தைச் செலுத்தி ஆறுதல் பெற்றார்.

'நியூ பிரைட்டன்' என்ற இடத்திலும் இவ்வாறே ஒரு சோதனை செய்தார், நாயுடு. அங்குள்ள மருத்துவக் கூடத்தில் இவர் சிகிச்சை செய்துகொண்ட பிறகு, டாக்டர், தாதி முதலியோரிடம் தனித்தனியே ஐந்து பவுன் நோட்டு ஒன்றைக் கொடுக்க முயன்றார். சொல்லிவைத்தாற்போல் எவரும் ஏற்றுக்கொள்ள மறுத்து, அருகிலிருந்த உண்டிப் பெட்டியில் போடும்படி காட்டினர்.

இங்கிலாந்திலுள்ள பெரும்பான்மையான சமூக ஊழியர்களின் கடமை யுணர்ச்சியும் நேர்மையும் நாயுடுவின் உள்ளத்தைக் கவர்ந்தன. இந்திய நாட்டிலும் இத்தகைய சமூக ஊழியர்கள் பெருகி, நாடு மேன்மைபெற வேண்டுமென்று விரும்புகிறார் நாயுடு.

**காரியத்தில் கண்**

இவ்வளவு சோதனைகளையும், நாயுடு தமது அலுவல்களுக்கிடையிடையேதான் செய்தார். இலண்டனிலுள்ள தொழிற்சாலைகளைக் காணல், அறியவேண்டிய இயந்திர நுட்பங்களை யுணர்தல்,

சிறந்த விஞ்ஞானிகளைக் கண்டு பேசி மகிழ்ந்து புதுமைகளை யறிதல் முதலியவற்றில், நாயுடு சுறுசுறுப்பாக விருந்தார். சென்றவிடங்களில் அறிவுக்கும் வியப்புக்கு முரியவற்றை உள்ளத்தில் பதியவைத்துக் கொள்வதுடன் புகைப்படத்திலும் பதியவைத்துக் கொள்ளத் தவறவில்லை. நாயுடுவின் நினைவாற்றல் மிக வியக்கத்தக்கது. மேனாட்டுப் பயணத்தில் கண்டறிந்த சிறு செய்திகளையும் மறவாமல் இடம் தெரு உள்பட இவர் தெரிவிப்பதை இன்றும் இவரிடம் கேட்டறியலாம்.

**ஜெர்மனியில்......**

நாயுடு ஜெர்மனிக்குச் சென்றார். அங்கு இலண்டன் அனுபவத்தைவிட இவருக்குப் பலவகை அனுபவங்கள் கிடைத்தன. அங்குள்ள பிரபலமான 'டோம் ஓட்டல்' லில் (Dom Hotel) நாயுடு தங்கியிருந்தார். அப்பொழுது, உலகத்தையே கலக்கிய ஹிட்லர், கோயரிங் ஹெஸ், கோயபெல்ஸ் முதலிய நாசித் தலைவர்களைக் கண்டு உரையாடும் வாய்ப்பு ஏற்பட்டது. ஹிட்லருக்கும் நாயுடுவுக்கும் இடையில் டாக்டர் லே (Dr. Ley) என்பவர் மொழி பெயர்ப்பாளராயிருந்தார். இத்தலைவர்களைத் தமது காமிராவில் புகைப்படம் எடுத்துக்கொண்டார் நாயுடு. இவர் ஹிட்லரின் தனிப் படமொன்றில் அவருடைய கையெழுத்தைப் பெற்றிருப்பது பெருமைக்குரியது. ஆனால், 'டஸ்ஸல் டோர்' (Dussel Dore) என்னுமிடத்தில் ஜெர்மன் இராணுவப் படை முன்னேற்றத்தைப் புகைப்படம் எடுக்கவே, எதிரி நாட்டின் உளவாளி என்று ஐயுறப்பட்டு நாயுடு கைது செய்யப்பட்டார்.

100674

ஆயினும் சிறிது நேரத்தில் நாயுடுவின் உண்மை நிலையுணர்ந்த நாசி போலீஸார் இவரை விடுதலை செய்தனர். இவ்வாறே, 1935-ல் காலமான ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் சவ அடக்க ஊர்வலக் காட்சியையும், வேல்ஸ் இளவரசர் ஒலிம்பிக் கண்காட்சிக்கு வந்த காட்சியையும் புகைப்பட மெடுத்தபோதும் சில துன்பங்களை அடைந்ததுண்டு.

**ஜவாஹர்லாலுடன் பழக்கம்**

இப்பொழுது இந்தியாவின் முதல் அமைச்சராயிருக்கும் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் தமது மனைவி கமலா நேருவின் உடல் நலத்தைக் கவனிக்கும் பொருட்டு, ஸ்விட்சர்லாந்துக்குப் போயிருந்தார். அங்கு, 'பேடன் வீலர்' (Baden Veiler) என்னும் நல்லிடத்தில் தங்கியிருந்தார். அப்பொழுது நாயுடு அங்குச் சென்று நேருவைக் கண்டு பேசி மகிழ்ந்து, சில காட்சிகளைப் படம் பிடித்துக்கொண்டார். அத்துடன், நேரு இலண்டன் சென்றபொழுது நடைபெற்ற விருந்துபசாரம், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் முதலியவற்றிலும் நாயுடு கலந்துகொண்டு நேருவிடம் பழகினர். பிற்காலத்தில், திரிபுரா காங்கிரஸ் கூட்டத்திற்கு நாயுடு சென்றிருந்தபோது, நேரு நாயுடுவை மறக்காமல் பழைய நினைவுடன் பேசிப் பாராட்டினர்.

**இந்தியா திரும்புதல்**

இங்ஙனம் பலவகை அனுபவங்களைப் பெற்ற நாயுடு, சில மாதங்களுக்குப் பிறகு 1935-ம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் தாய்நாடு திரும்ப முடிவு செய்து, 'பி. அண்டு ஓ.' (P. & O. Mail Boat) கட்-

DwM93

வில் இந்தியாவுக்குத் திரும்பினர். இக்கப்பலில்தான் முன்பு இந்தியாவில் வைசிராயாயிருந்த லின்லித்கோ பிரபுவும் அவருடைய மனைவி முதலியோரும் வந்து கொண்டிருந்தார்கள். நாயுடு லின்லித்கோவுடன் உரையாடிப் பழகினது மன்றி, சில இந்தியர்களுடன் சேர்ந்து கப்பலிலேயே அவருக்கு வரவேற்பும் விருந்துபசாரமும் நடத்தினர். பின்னர், நாயுடு இந்தியா சேர்ந்து கோவையை யடைந்தார்.

## 3. மூன்ரும் பயணம்

### பயண நோக்கம்

நான்காண்டுகள் கழிந்த பிறகு, நாயுடு மீண்டும் மேனுட்டுப் பயணத்தை மேற்கொண்டார். இம்முறை மேனுட்டுத் தொழில் நுணுக்கங்கள் முழுவதையும் கண்டறிந்து வரவேண்டுமென்று அவாக் கொண்டார். முக்கியமாக உற்பத்தித் துறைகளில் கவனம் செலுத்துவதற்கான திட்டங்களேக் கைக் கொண்டார். இன்னும், அமெரிக்கா சென்று விஞ்ஞானப் புதுமைகளேக் கண்டறிய வேண்டுமென்பதுடன், தேவையான இயந்திர சாதனங்களேப்பெற்று வரவேண்டுமென்ற திட்டமும் இருந்தது. இவ்வாருன முற்போக்குள்ள நோக்கங்களுடன், நாயுடு 1939-ம் ஆண்டில் மூன்ரும் பயணத்தைத் தொடங்கினர்.

### வயிற்றுவலி

நாயுடு அடிக்கடி வயிற்றுவலியால் துன்புறுவார். பயண முடிவுக்குப் பிறகு வயிற்றுவலி ஏற்பட்டதென்ருலும் தம் முடிவை மாற்றிப் போடாமல்

குறித்த நாளில் பயணத்தைத் தொடங்கிவிட்டார். பம்பாய்த் துறைமுகத்தை யடைந்து கப்பலில் ஏறும் பொழுது வயிற்றுவலி மிகக் கொடுமையாய் ஏற்பட்டது. இதற்காகத் தம் ஊரிலிருந்து ஒரு மருத்துவ நிபுணரைக் கூடவே அழைத்து வந்திருந்தாராதலால் அவர் கொடுத்த மருந்தின் துணையால் நோய் தணியப் பெற்றுக் குணமடைந்தார். அப்பொழுது நாயுடு இருந்த நிலையில், 'குணமடைந்தார்' என்பதைவிட 'உயிர் பிழைத்தார்' என்பதே மிகவும் பொருந்தும்.

### உலகப் பெரும் போர்

நாயுடு அமெரிக்கா செல்வதையே முக்கியமாகக் கருதி யிருந்தாராயினும் முதலில் ஐரோப்பாவுக்கே சென்றார். அங்குள்ள தொழிற்சாலைகளின் அமைப்பு, வேலைமுறை முதலியவைகளை ஆழ்ந்து அறியவேண்டுமென்பதுதான் இதற்குக் காரணம். ஆனால், அங்குப் போன சில மாதங்களில் இரண்டாம் உலகப் பெரும் போர் தொடங்கிவிட்டது. ஹிட்லர் போர் அறிக்கை விடுத்து, போலந்துக்குள் தமது படைகளை நுழையச் செய்தார். ஆகவே பெரிய தொழிற்சாலைகள் இடம் பெயரலாயின. இங்கிலையில் பிரிட்டனில் இருப்பதால் பயனில்லை என்பதையறிந்த நாயுடு அமெரிக்கா செல்ல நினைத்தார்.

### அமெரிக்கா செல்லல்

அமெரிக்காவிலுள்ள நியூ யார்க் (New York நகரில் உலகக் காட்சி (World Fair) அக்டோபர் கடைசி வாரத்தில் நடைபெறவிருந்தது. அதைக் காணவேண்டுமென்று விரும்பிய நாயுடு, உடனே

புறப்பட்டு அமெரிக்காவை யடைந்தார்; முன்னரே பழக்கமான பிரபலமுள்ள, 'கம்மோடர்' (Commodore) என்னும் ஓட்டலில் தங்கினர்.

**உலகப் பொருட்காட்சி**

அமெரிக்காவில் நாயுடுவின் வேலைத்திட்டம் மிகவும் ஒழுங்கானது. பத்து நாட்கள்வரையில் பொருட்காட்சிச்சாலைகளைக் கண்டறிவது என்பது முதல் திட்டம். இத்திட்டப்படி நாயுடு பொருட்காட்சிச் சாலையைச் சுற்றிப் பார்த்தார். அங்குள்ள வெறுங் களியாட்டக் காட்சிகளைத் தவிர்த்து, அறிவுக்கும் தொழிற் பயிற்சிக்கும் அடிப்படையான இடங்களையும், பொருள்களையும் விடாமல் பார்த்து ஆராய்ந்தறிந்தார். தாம் கண்டு வியந்த காட்சிகளைப் பல்லாயிரம் அடிகளையுடைய அசைவுப் படமாகவும் பிடித்துக் கொண்டார்; அரிய செய்திகள் ஒவ்வொன்றையும்பற்றி விரிவான குறிப்புக்கள் எழுதிச் சேர்த்தார். இவையெல்லாம் அறிவு வளர்ச்சிக்கு மிகவும் பயனுடையவை யாதலால், இந்தியாவிலுள்ள பள்ளிக்கூடங்கள், தொழில் நிலையங்கள் முதலியவற்றிற்கு இவற்றை அனுப்பிப் பயன்பெறச் செய்தார். கடிதங்களின் வாயிலாக அமெரிக்க அனுபவங்களைப் பல நண்பர்களுக்கு விவரித்தெழுதியும் பயனடையச் செய்தார்.

**நாயுடுவின் கடிதம்**

இவ்வாறு நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் ஒன்றில், "இங்கு மக்கள் எல்லோரும் மிகுந்த அறிவாளிகளா யிருக்கிருர்கள். இரயில் சேரும், புறப்படும் நேரங்களை எல்லோரும் அறிந்திருக்கிருர்கள்.

ஆகையால், நடைபாதையின் குறுக்கே இருப்புப் பாதை செல்லும் இடங்களில் அடைப்புகள் (Level Crossing Gate) கிடையா. ஆயிரம் மைல்கள் தூரம் அமெரிக்கப் புகைவண்டியில் பயணம் செய்தாலும் அழுக்காகாத உடையுடன் இறங்கலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**சிகாகோ செல்லல்**

நாயுடு அவர்களை அடிக்கடி வருத்திக்கொண்டிருந்த வயிற்றுவலி, அமெரிக்காவில் மிகவும் கொடுமையாய் விட்டது. மருத்துவம் செய்த பிரபல டாக்டர் பிக்கார்டு என்பவர் சிகாகோ சென்று அங்குள்ள ஒரு மருத்துவக் கூடத்தில் சிகிச்சை பெறும்படி தெரிவித்தார். அவருடைய அறிவுரைக்கிணங்கிய நாயுடு சிகாகோ சென்று சிகிச்சை பெற்றார்.

**சிகாகோவில் சொற்பொழிவு**

செல்வம் மிகுந்த சிகாகோ நகரம், சுவாமி விவேகானந்தரின் உலகப் புகழுக்குக் காரணமானது. இந்நகரில் இருந்தபோது நாயுடு பல மாநாடுகளில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். இதனால் பல நிபுணர்களின் பாராட்டுதலைப் பெற்றார். அகில உலக வணிக மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு தமது திறமையை வெளிப்படுத்தினார். செய்திகளை நுட்பமாக ஆராய்ந்து ஆங்கிலத்தில் அருமையாகச் சொற்பொழிவாற்றும் நாயுடுவின் திறமையை அமெரிக்கப் பத்திரிகைகள் மிக வியந்து பாராட்டின. திருமதி லீமன் கிரே என்னும் சீமாட்டி, நாயுடு அவர்களைப் புகழ்ந்து

பாராட்டித் தம் அன்பின் அறிகுறியாக இவருக்குப் பூச்செண்டு அளித்து மகிழ்ந்தார். இவ்வாறு புகழ் பெற்ற நாயுடு, மிசௌரி (Missouri) முதலிய அமெரிக்க நகரங்களைப் பார்வையிட்டுவிட்டு, செயின்ட் லூயிஸ் (St. Louis) என்னும் நகரத்தை அடைந்தார்.

### ஐம்பதில் வளைந்த அருங்கலைஞர்

நாயுடு, செயின்ட் லூயிஸ் நகரத்திற்குச் சென்ற போது பனி மிகுதியாயிருந்தது; குளிரின் கொடுமை பொறுக்கமுடியாமலிருந்தது. ஆயினும், நாயுடு இந்திய உடையுடன் நீண்டகாலம் தங்கியிருந்தது இந்நகரத்தில்தான். இங்குள்ள பிரபலமான கைத் தொழிற் பள்ளியில் கல்வி பயில வேண்டுமென்ற விருப்பந்தான் நாயுடுவை இவ்வாறு தங்கச் செய்தது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்று கேட்பார்கள். வளையும் என்பதற்கு நாயுடு சான்றாய் மிளிர்கிறார். 1940-ம் ஆண்டில் தமது நாற்பத்தொன்பதாவது வயதில் கார்டர் கார்பரேடர் பள்ளியில் (Carter Corborator School) தொழிற் கல்வி பயில்வதற்காகச் சேர்ந்தார். அமெரிக்கத் தொழிற்சாலைகளிலேயே முக்கியமான இதில், ஒரு மாணவனுக்குக் கல்வி கற்பிக்கும் செலவு மாதம் இரு நூறு டாலர்களாம். இப்பள்ளியின் முதல் இந்திய மாணவரான நாயுடு, ஏனைய மேனாட்டு மாணவர்களைப் பின்பற்றி வாரம் ஒன்றுக்குப் பதினாறு டாலர்கள் வீதம் உதவி ஊதியம் பெறும் வாய்ப்பையும் பெற்றார். பல்கலைக் கழகப் பட்டதாரிகளே சேர்ந்து படிக்கும் விஞ்ஞானப் பள்ளியில், பள்ளிக்கூடத்தில்

படித்தறியாத நாயுடு சேர்ந்து படித்துப் பட்டமும் பெற்ருரென்ருல், இவருடைய ஆர்வத்தை என்னென்றுரைப்பது!

**பத்திரிகைகளில் புகழ்**

நாயுடு தன்னை ஒரு மாணவனுகக் கருதி எவ்வளவு அடக்கமாயிருக்க முயன்றபோதிலும் அமெரிக்க மக்கள். இவர் இந்தியாவின் தொழில் விஞ்ஞானி என்பதையும், மிகச் சிறந்த மோட்டார் மன்னர் என்பதையும் மறந்துவிடவில்லை. பொதுக்கூட்டங்கள், சொற்பொழிவுகள், பத்திரிகையாசிரியர் பேட்டிகள் போன்றவை சாதாரணமாகிவிட்டன. இவர் சொற்பொழிவுக்காக எடுத்துக்கொண்ட தலைப்புகள் "பிறரை ஏமாற்ருதே - உன்னையும் ஏமாற்றிக்கொள்ளாதே, உடலைப் பேணி வளர்க்கவேண்டும்-ஒழுக்கம் விழுப்பம் தரும்" முதலியவை.

இதுவரையில் அமெரிக்காவில் ஆடம்பரமின்றி அமைதியாகச் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்த நாயுடு, இப்பொழுது அமெரிக்கப் பத்திரிகைகளில் பிரபலமாக விளங்கலாஞர். எங்கேனும் நாயுடு சென்ருலும் பேசினுலும் உடனே அவை பத்திரிகைகளில் நாயுடுவின் புகைப்படத்துடன் வெளியாய் விடும். ஒரு சமயம் அமெரிக்கரின் நாகரிக வாழ்க்கையை மிகவும் பாராட்டிப் பேசிவிட்டு, "மற்ற நாட்டாருக்கு எத்தனையோ வகையான பகைவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் அமெரிக்கருக்கு இரண்டு கொடிய பகைவர்கள் இருக்கிருர்கள்! அவர்களில் ஒருவர் புகையார்! மற்ருெருவர் புகைச்சியார்!

(Mister Smoker and Miss Smokie)" என்று தெரிவித்தாராம். இது பத்திரிகைகளில் பிரபலமாக வெளிவந்தது. மற்ெருரு சமயம் அமெரிக்கப் பெண்களைப் பற்றிப் பேசினுர். அது, "அமெரிக்கப் பெண்களின் குதியுயர் 'பூட்ஸ்'களையும், வர்ணம் பூசிய உதடுகளையும் பிரபல இந்தியத் தொழில் விஞ்ஞானி கண்டிக்கிருர்" என்ற தலைப்பில் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்து பொதுமக்களிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது.

**அலெக்ஸாண்டர் விக்டர்**

நாயுடு, தேவன் போர்டு என்ற மற்ெருரு நகரத்திற்குச் சென்று, அங்குள்ள பிரபலமான பிலிம் படத்திற்கான இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். அதன் பிறகு, 16 M.M. காமிராவைக் கண்டுபிடித்த பிரபல விஞ்ஞானியான அலெக்ஸாண்டர் விக்டர் என்பவரையும் வேறு பல அறிஞர்களையும் கண்டு பேசிக் களித்தார்.

**'கருமமே கண்ணுயினுர்'**

நாயுடு அவர்கள் அமெரிக்காவில் பெரும் புகழ் பெற்று விளங்கினுராயினும், அதில் மயங்கித் தம் நோக்கத்தை மறந்துவிடவில்லை; இயந்திர சாதனங்களைப் பெறுவதற்கு முயன்றுகொண்டிருந்தார். அப்பொழுது போர்மேகம் அமெரிக்காவிலும் படரும் அறிகுறிகள் தென்பட்டன. அதனுல் இந்தியாவிலிருந்து பணம் கிடைப்பது அரிதாய்விட்டது. நாயுடுவைப் பிடித்திருந்த வயிற்று வலியும் அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. இங்கிலையில்

விரைவில் இந்தியா திரும்புவதே தக்கதென்று முடிவு செய்தார், நாயுடு. ஆகவே, 10,000 டாலர்கள் மதிப்புள்ள இயந்திரங்களுக்குமட்டுமே 'ஆர்டர்' கொடுத்துவிட்டு நாயுடு மூன்றுவது பயணத்தை முடித்துக்கொண்டார்.

**'நாஜி அனுதாபி நாயுடு!'**

நாயுடு கொச்சி துறைமுகத்திற்கு வந்தபோது, ஒரு புதிய செய்தியைக் கேள்விப்பட்டுப் புன்முறுவல் பூத்தார். நாயுடுவின் முன்னேற்றத்தில் அழுக்காறு கொண்ட கயவர்கள், 'நாயுடு, நாஜி அனுதாபி' என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டிருந்தார்கள். ஆகவே கொச்சித் துறைமுகத்தில் துப்பறியும் நிபுணர்கள் இவரை வரவேற்கக் காத்துக் கொண்டிருந்தார்கள்! ஐந்து நாட்கள் வரையில் நாயுடுவின் பெட்டி, படுக்கை, பிலிம்சுருள், பைல்கள், முப்பத்தேழாயிரம் கடிதங்கள் முதலிய எல்லாப் பொருள்களையும் பரிசோதனை செய்து, ஜெர்மனியைப் பற்றிய விவரம் ஒன்றுமில்லாமையால் தோல்வியுடன் திரும்பினுர்கள்! நாயுடு புன்சிரிப்புடன் புறப்பட்டுக் கோவை சேர்ந்தார்.

# IV. அருங் கண்டுபிடிப்புகள்

## 1. இயந்திர விஞ்ஞானி

### நாயுடுவின் நுண்ணறிவு

நாயுடு அவர்கள் இளம் பருவத்தில் வாங்கிய மோட்டார் சைகிளைப் பிரித்துப் பார்த்து, அது ஓடும் நுட்பத்தை யறிந்ததிலிருந்தே இவருடைய நுண்ணறிவு பல புதுமைகளைச் செய்யும் ஆவலில் துடித்து நின்றது. எதையும் ஆழ்ந்து சிந்தித்து உண்மை நிலையை யுணரும் வல்லமை பெற்றிருந்த நாயுடு, கால வட்டத்தில் பல வியத்தகு கருவிகளைக் கண்டுபிடித்ததில் வியப்பில்லை.

### வியத்தகு கருவிகள்

நாயுடு, தமது நீண்டகால ஆராய்ச்சியாலும் இடைவிடாத உழைப்பாலும் நூற்றுக்கு மேற்பட்ட வியத்தகு விஞ்ஞானக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அவற்றுள் சில :

மின்சார க்ஷவரக்கத்தி (Rasant Electric Safety Razor), பிளேடு, பஸ் அதிர்ச்சியைச் சோதிக்கும் கருவி (Vibrator Testing Machine), ஒளி சமனக் கருவி (Distance Adjuster), கணக்குப்போடும் கருவி (Calculating Machine), விளையாட்டு மோட்டார் (Toy Automobile), நுண்ணிய அளவைக் கருவி (1/2000-th Measuring Machine), ரிப்ரிஜிரேடர் (Refrigerator), ஒலிப்பதிவுக் கருவி (Recording Machine), தொலைநோக்காடி (Lens), ரேடியோ கடிகாரம் (Radio Clock), ஓட் பதிவுக் கருவி (Vote Recording), 'காபி சப்ளையர்' (Coffee Meet

Supplier), துலக்கும் கருவி, காசைப் போட்டால் தானே பாடும் கருவி (Slot Singing Machine). இவற்றை வெற்றியுடன் உருவாக்கியிருக்கிருர் நாயுடு.

**மின்சார க்ஷவரக் கத்தி**

இக்கருவி ஒன்றிலேயே நாயுடு பெரும் புகழும் நிறை பொருளும் பெறக்கூடும். இக்கத்தியின் பிடியில் மின்சாரப் பெட்டி (Battery) மிகத் திறமையுடன் பொதிந்து வைக்கப்பட்டிருக்கிறது. முகத்தில் கத்தியை வைத்து நகர்த்தத் தொடங்கியவுடன் கைப்பிடியிலிருக்கும் மின்சாரப் பெட்டி வேலைசெய்து வேண்டிய மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ளுகிறது. உடனே அதிலிருக்கும் மோட்டார் வேலை செய்யத் தொடங்குகிறது. அதன் வேகத்தால் கத்தி வேலைசெய்யத் தயாராகிவிடுகிறது. தாமாகவே க்ஷவரம் செய்யும் இப்புதுமைக்கருவி மிக மிருதுவாகவும் விரைவாகவும் வேலை செய்கிறது.

**மெல்லிய 'பிளேடு'**

ஒரு அங்குலத்தில் 200-ல் ஒரு பாகம் கன அளவுள்ள ($\frac{1}{200}$)" க்ஷவர பிளேடு ஒன்றையும் நாயுடு தயாரித்திருக்கிருர். இது உலகத்தில் தயாரிக்கப்படும் எல்லாவற்றையும்விட மிகவும் மெல்லியது. இதை நார்வே நாட்டு உருக்கு ஒன்றினுல் மட்டுமே செய்ய முடியும். நாயுடு தமது கோவைத் தொழிற்சாலையிலேயே இதைத் தயாரித்தார். இதைக்கொண்டு 200 முறை க்ஷவரம் செய்துகொள்ளலாம். இரண்டாண்டுகளுக்கு ஒரே பிளேடு போதுமென்ருல் வியப்பாயில்லையா?

பரிசு பெற்றன!

1936-ஆம் ஆண்டில் 'லீப்ஸிக்' என்னும் ஜர்மன் நகரத்தில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சிச்சாலையில் க்ஷவரக்கத்தி முதற் பரிசும், பிளேடு இரண்டாம் பரிசும் பெற்றன. இந்தியாவில் சென்னை, கல்கத்தா, இலட்சுமணபுரி முதலிய நகரப் பொருட் காட்சிகளிலும் பரிசுகள் பெற்றன. இவற்றைக் கண்ட மேனாட்டறிஞரும் இந்திய அறிஞரும் வியந்து போற்றினர்; பத்திரிகைகள் புகழ்ந்தன.

இந்தியராகிய நாயுடுவின் திறமையைக் கண்டு மேனாட்டார் வியந்ததுடன் நிற்கவில்லை. நியூயார்க் நகர வணிகர் ஒருவர் பிளேடின் விற்பனை உரிமை (Patent)யைப் பெற விரும்பினர். அதற்காகப் பத்து லட்சம் ரூபாய்கள் தருவதாகத் தெரிவித்தார். ஆனால், நாயுடு விற்பனையுரிமையைத் தர மறுத்து விட்டார். ஏனென்றால் இந்தியாவிலேயே அதை மிகுதியாகத் தயாரிக்க வேண்டுமென்பது இவருடைய விருப்பம். "பதினெட்டிலட்சம் ரூபாய் மூலதனத்தில் இந்தியாவில் தொழிற்சாலை நிறுவினால், க்ஷவர பிளேடுக்காக ஆண்டொன்றுக்கு இரண்டு கோடி ரூபாய்களைப் பிற நாடுகளுக்குப் போகாமல் நம் நாட்டிலேயே தங்கச் செய்யலாம்" என்பது நாயுடுவின் கருத்து. ஆனால், இக்கருத்து நிறைவேறாததால், நாயுடு, நியூயார்க் வணிகருக்குத் தாமே கடிதமெழுதி, பிளேடு விற்பனை யுரிமையை இனமாகவே வழங்கிவிட்டார்!

**அதிர்ச்சியை அறியும் கருவி**

மோட்டார் இயந்திரம் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது துடி துடிப்பு வேலை செய்துகொண்டிருக்குமல்லவா? அத்துடிப்பு மிகுதியா குறைவா என்பதைச் சோதித்துணரும்படி துணை செய்கிறது, இக் கருவி (Vibrator Testing Machine).

**'ரிப்ரிஜிரேட்டர்'**

மோட்டார் வண்டியில் 'ரேடியேற்றர்' (Radiotor) என்னும் கருவி யிருக்கிறதல்லவா? அதற்குப் பொருத்தமாக இருக்கும்படி செய்யப்பட்டது, இக் கருவி (ரிப்ரிஜிரேட்டர்). இதை மோட்டாரில் வைத்துப் பயன் படுத்தியதில், மோட்டார் நூற்றுக் கணக்கான மைல்கள் ஓடும் வரையில், ரேடியேற்றரில் அடிக்கடி தண்ணீர் ஊற்றவேண்டிய அவசியமில்லாமற் போய்விட்டது.

**'காமிரா' தொலைநோக்காடி**

'பிலிம் காமிரா'வில் காட்சியின் தொலைவை விரும்பியவாறு அமைத்துக் கொள்வதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு பாகமே இக்கண்ணாடி. இதனால் மிகத் தொலைவிலிருக்கும் காட்சியையும் அருகிலிருப்பதுபோல், புகைப்படக் கருவிக்குள் இருக்கும் கண்ணாடித் திரையில் கொண்டுவந்து நிறுத்திப் படம் எடுக்க முடியும்.

**'ஓட்' எடுக்கும் கருவி**

இது நாயுடுவின் கண்டு பிடிப்புகளில் அருமையானது. 'ஓட்' போட்ட பிறகு, பிறர் தவறு செய்ய முடியாதபடி இக்கருவி அமைக்கப்பட்டிருக்கிறது.



(15) Clock with 6 feet dial and 4 faces made in the U. M. S. Radio Factory, "Gopal Bagh" (1948)

தானே இயங்கும் ரேடியோ கடிகாரம்

இதனுல் சில விஞடிகளுக்குள் மிக விரைவாக 'ஓட்' களை எண்ணிவிடலாம். இதைப் பன்னிரண்டு ஆண்டு களுக்குமுன் நாயுடு கண்டுபிடித்து, சென்னையில் நடைபெற்ற "பார்க் பேர்" (Park Fair) பொருட் காட்சிச் சாலையில் எல்லோரும் பார்க்கும்படி வைத் திருந்தார். ஜனநாயகம் என்பது மிக விரைவாகப் பரவிக்கொண்டிருக்கும் நமது இந்தியாவில், இது வருங்காலத்தில் மிகவும் பயனுடையதாக விளங்கு மல்லவா ?

## ரேடியோ கடிகாரம்

இது புதுமையான முறையில் நாயுடுவால் தயா ரிக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான சக்கரங் கள் கிடையா. எவ்வளவு குறைவான கருவிகள் தேவையோ அவ்வளவே உள்ளன. இது, மின்சார ஆற்றலால் ஆண்டு, மாதம், கிழமை, நாள், மணி ஆகியவற்றைக் காட்டுகிறது.

## கண்டுபிடிப்புகளைப்பற்றி

இன்னும், நாயுடுவின் பிற கண்டுபிடிப்புகள் யாவும் நுண்ணறிவின் திறத்தைக் காட்டக் கூடி யவையாகும். 'இவையெல்லாம் என்ன அவ்வளவு அருமையானவையா' என்று சிலர் ஒன்றையும் பார்க் காத நிலையில் நினைக்கலாம்; சொல்லலாம். ஆனுல், நேரில்கண்டு உண்மையை உணர்ந்தால் இக்கருவி களின் அருமை நன்குவிளங்கும். விஞ்ஞான ஆராய்ச்சி யும் அறிவும் இந்தியாவில் அறிவின் அளவில் இருக் கிறது. அவ்வறிவு செயலளவில் உருப்பெற்று மக் களுக்கு அன்ருட வாழ்க்கையில் பயன்பெறும்படி

விஞ்ஞானக் கருவிகள் இந்தியரால் கண்டுபிடிக்கப் பட்டு வெளிவரவேண்டும். நாம் கண்டு அனுபவிக்கும் விஞ்ஞான விந்தைகளெல்லாம் வெளி நாட்டாரின் இறக்குமதி. இந்த எளிய நிலையிலிருக்கும் நமக்கு, நாயுடுவின் கண்டுபிடிப்புகள் அருமையே என்பதில் தடையென்ன?

## நாயுடுவின் சிறப்பு

நாயுடு அமெரிக்கா மோட்டார் மன்னர் ஹென்றி போர்டைப் போல, இயந்திர நிபுணர்; தாமஸ் ஆல்வா எடிஸனைப்போல, சாதனையில் சலியாத உழைப்பாளி; ஈஜின் மேயர் என்ற கோடீசுரரைப் போல, வாழ்க்கையைத் திட்டங்களாய் அமைத்துக்கொண்டவர். என்றாலும், போர்டைப்போல் தம் மேதையைத் தமக்கெனப் பெரும்பொருள் ஆக்கிக்கொள்ளவில்லை; எடிஸனைப்போல் எந்த ஒன்றையும் 'தம் உரிமை' என்று எப்பொழுதும் கூறிக் கொள்ளவில்லை. 'தாமின்புறுவது உலகின்புறக்' காணவே விழைகிறார் நாயுடு. இவருடைய சாதனைகளை யாவரும் செய்யலாம். ஐயம் ஏற்பட்டால், அதை விளக்கிக் காட்டவும் தயாராயிருக்கிறார். இதற்கெல்லாம் இவர் விரும்பும் கைம்மாறு என்ன? இந்த நாடு எதற்கெடுத்தாலும் பிறநாட்டை நம்பிக் கொண்டிருக்காமல் தன் தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரே பரந்த எண்ணம் தான்!

இத்தகைய பெருநோக்குடைய நாயுடுவின் மேன்மையை மிக விரைவில் மக்கள் உணர்ந்து போற்றுவார்கள் என்பதில் தடையில்லை.

## 2. தாவர விஞ்ஞானி


### விவசாயச் சோதனை

நோபல் பரிசு பெற்றுப் பிரபல விஞ்ஞானி யென்று பெயர் பெற்றிருளிரும் சர். சி. வி. இராமன் அவர்கள், ஒருசமயம், 'நாயுடு அவர்கள் இயந்திர மேதை மட்டும் அல்லர்; பெரிய தாவர விஞ்ஞானியு மாவார்' என்று பாராட்டிப் பேசியிருக்கிறார். இப் புகழ்மொழிக்குரியவராக நாயுடு என்ன செய்துள்ளா ரென்பதை நாட்டுமக்கள் நன்கறியவேண்டாமா? அறிந்தால், நாயுடு மகிழ்வார் என்பது உண்மைதான். ஆனால், நாட்டுமக்களே நலம் பெறுவார்கள்.

உலகப் பெரும் போர் காரணமாக மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்கள் கிடைக்காமல் நெருக் கடி ஏற்பட்டதல்லவா? இந்நிலையைக் கண்ட நாயுடு விவசாயத்தில் கருத்தைச் செலுத்தினார். உணவுப் பொருள்களை மிகுதியாய் விளைப்பதற்குரிய வழிவகை களை ஆராய்ந்தார். 'உணவுப் பொருள்களுக்குமா பிற நாட்டை எதிர்பார்க்கவேண்டும்?' இந்தக் கேள்வியே நாயுடுவைத் தாவர ஆராய்ச்சியில் புகச் செய்தது ஆராய்ச்சியில் வெற்றி கண்டு விளங்கு கிறார். சோளம், பருத்தி முதலிய பயிர்கள், இவர் கண்டறிந்த முறைகளால் மிகுந்த பயன் தருகின்றன.

### சோளம்

இந்தியாவில் ஏழுலட்சம் கிராமங்கள் இருக்கின் றன. இந்திய மக்களில் பெரும்பாலோர் கிராமத்தி லேயே வாழ்கிறார்கள். இவர்களிற் பெரும்பான்மை யினர் சோளத்தையே உணவாகக் கொள்கின்றனர். விலை மலிவாக இருக்கிறதென்பதுடன் உடம்புக்கு




நாயுடு பயிர் செய்திருக்கும் அதிஅற்புத சோளச் செடி

ஊட்டம் தரும் உணவுப் பொருளாகவும் இருக்கிறதென்பது, யாவரும் அறிந்ததே. ஆகையால் சோளப் பயிரில் நாயுடுவின் கருத்துச் சென்றது.


நாயுடு தமது பங்களாவை யடுத்துள்ள கொல்லை யில் ஒரு சோளச் செடியை வைத்துப் பயிர் செய்து, அதில் விஞ்ஞானப் பரிசோதனையை நிகழ்த்தினார். அது சிறிது காலத்தில் 18½ அடி உயரம் வளர்ந்தது; 26 கிளைகள் விட்டது; ஒவ்வொரு கிளையும் ஆறி லிருந்து பன்னிரண்டடி வரையிலும் நீளமுள்ளதாய் வளர்ந்தன; 39 கதிர்கள் செடியிலிருந்து வெளி யாயின.

இச்செடியிலிருந்து கிடைத்த விதையை நாயுடு முளைக்கப் போட்டார். அது முளைத்து எட்டு வார காலத்திற்குள் பத்தடிக்கு மேல் ஓங்கி வளர்ந்தது. செடியும் பல கதிர்களை விட்டது. ஒரு சோளச் செடி யில் இரண்டு மூன்று கதிர்கள் தோன்றுவதே நல்ல விளைவு என்று கருதும் நம் நாட்டில், 39 கதிர்கள் ஒரு செடியில் தோன்றுகின்றனவென்றால், அது செயற்கரும் செயலன்றோ? பெரும் பயனுடைய தன்றோ?

பருத்தி

உணவுக்கு அடுத்தபடியாக உடை மிக இன்றி யமையாத தென்பதை எவரே யறியார்? உடைக் குரிய பஞ்சை மிகுதியாக விளைவிக்கவேண்டியது நாட்டு மக்களின் நற் கடமையாகும். ஆதலால், பருத்திச் செடியிலும் நாயுடுவின் கருத்துச் சென்றது.

ஒரு பருத்திச செடியை நட்டு அதிலும் விஞ் ஞான முறைகளைக் கையாண்டார் நாயுடு. அச்செடி பத்தடி உயரம் வளர்ந்தது. குனிந்து பார்க்கும்படி குட்டையாய் வளரும் பருத்திச் செடி, நிமிர்ந்து பார்க்




நாயுடு பயிர்செய்திருக்கும் அதிஅற்புத பருத்திச் செடி

கும்படி நெட்டையாய் வளர்கிறதென்றால், அது வியத்தற்குரிய தன்றோ? அச்செடி ஓராண்டிற்குள் 2½ அங்குல இழையுள்ள 24 ராத்தல் பருத்தியைக் கொடுத்திருக்கிறத. ஓர் ஆண்டுக்கு ஒரு ஏகர் நிலத்

தில் 125 ராத்தல் பருத்தியை விளைவிக்க விவசாய நிபுணர்கள் பெருமுயற்சி செய்துகொண்டிருக்கும் போது, ஆறு செடிகள் ஓர் ஏகர் விளைவைக் கொடுக்கிறதென்றால் அது வியந்து பாராட்டற்குரிய தன்றோ? உலகப் பருத்தி விளைவு நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா இருக்கிறதென்பது பெருமைக்குரிய தென்றாலும், நாயுடுவின் அரிய இச் சாதனையைக் கையாண்டால், இந்தியா முதன்மை யாகவே விளங்குமென்பதில் தடையுண்டோ?

இவ்வாறு வெற்றி கண்ட பருத்திச் செடியி லிருந்து கிடைத்த விதைகளை முளைக்கப்போட்டதில், அது முளைத்து நான்கு மாதத்திற்குள் ஐந்தடி உயரம் வளர்ந்தது.

**பழ வகைகள்**

நாயுடு அவர்கள் பழவகைகளையும் ஆராய்ந்து தமது விஞ்ஞான முறைகளைக் கையாண்டு அற்புதச் செயல் நிகழ்த்தியிருக்கிறார். தென்னிந்தியாவில் கிடைக்கும் சிலவகை வாழைப் பழங்கள் (மொந்தன் போன்றவை) உண்பதற்கு அவ்வளவு ஏற்றவையல்ல. அவற்றை மிருதுவானவையாகவும் சுவை மிகுதி யுடையனவாகவும் மாறும்படி செய்திருக்கிறார் நாயுடு. இன்னும், இருபத்தைந்து ஆரஞ்சுப் பழங் களின் தன்மை சுருங்கிய அளவில் ஒரே பழத்தில் ஏற்படும்படி செய்திருக்கிறார். அப்பழத்தைப் பிழிந் தெடுத்த சாறு கசப்பாயிருக்கிறது. அதனுடன் இருபத்தைந்து பங்கு நீரைக் கலந்தால் இனிப்பாக மாறிவிடுகிறத. ஆகவே ஒரு பழம் இருபத்தைந்து பழத்திற்குச் சமமான பயனைத்தருகிறது!

**நாயுடுவின் விஞ்ஞான முறை**

இவ்வாறு சோளம், பருத்தி, பழவகைகள் முதலியவைகள் அற்புதமான அளவிறந்த பயனையளிப்பதற்கு நாயுடு கையாளும் முறைகள் என்ன? அவர் சில இரசாயன திராவகங்களை ஊசியின் வாயிலாகச் செடியினுள் செலுத்தி (Injection) வெற்றிகண்டிருக்கிறார். இந்த இரசாயனங்கள் யாவை என்பதை நாயுடு மறைபொருளாகவே வைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் இப்பயனுள்ள முறையை அமெரிக்காவிலுள்ள அரிசோனு பல்கலைக் கழகத்திலுள்ள தனது நண்பருக்கு அனுப்பியிருக்கிறாராம்! விலை கேட்டிருந்தால், அமெரிக்கர்கள் பெருந்தொகை கொடுத்திருப்பார்கள். ஆனால், நாயுடு இனமாகவே கொடுத்து விட்டாராம்!

**'ஒளி வீசாத சுடர்'**

> "சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரி வான்கட்டே யுலகு"

என்றார் வள்ளுவர். நாயுடு இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாகவே விளங்குகிறார். இத்தகைய சிறந்த மேதை தாம் பிறந்த நாட்டில் ஒளிகுன்றிய விளக்காகவே ஒளிர்கிறார். இதற்குக் காரணம் விளம்பரத்தை விரும்பாத தன்மைதான் போலும். நம் நாட்டினர் இவரை நன்குணராவிடினும் அமெரிக்கர் ஒருவர், 'மிஸ்டர் நாயுடுவின் சிறந்த படைப்புகளை எங்களைச் சேர்ந்த பலர் மிக அபூர்வமாக மதிக்கிறார்கள்' என்று பாராட்டிக் கூறியுள்ளார். இந்நூற்றுண்டின் விஞ்ஞான ஆற்றல் படைத்துப் பயனுள்ள பல அரிய பொருள்களைக் கண்டுபிடித்துள்ள நாயுடு அவர்கள் ஒளி வீசாத சுடராயிருப்பினும், இனியேனும் பேரொளி வீசிப் பெரும் பயன் விளைக்கும் நற்காலம் பிறக்குமென்று நம்பலாமன்றோ?

# V. கைத்தொழிற் சாலைகள்


## 1. மின்சார மோட்டார் தொழிற்சாலை

### நாயுடுவின் ஆவல்

உலகம் சுற்றிய நாயுடு அவர்கள், பல்வேறு நாடுகளிலும் தாம் கண்டு கேட்டறிந்த அனுபவங்களை வீணாக்கிவிட விரும்பாமல் பயனுள்ளதாக்க எண்ணினார். இந்தியா ஓர் அமெரிக்காவாகவும், ஜெர்மனியாகவும், கிரேட்பிரிட்டனாகவும் ஆகவேண்டுமென்று விரும்பினார். நாற்பது கோடி மக்களின் தேவைக்கான எல்லாவகைப் புதுமைப் பொருள்களையும் இந்தியாவிலேயே தோற்றுவிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டார்.

### ஆவலில் மலர்ந்த திட்டங்கள்

இந்த ஆவலால் நாயுடு அல்லும் பகலும் ஆராய்ந்து பலவகைப் பொருள்களைத் தோற்றுவிப்பதற்கான தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் திட்டங்களை வகுத்தார். ஏறக்குறைய அறுநூறு வகைத் தொழில்களை நடத்துவதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்தார். அத்தனைக்கும் வேண்டிய அனுபவங்கள் இவரிடமிருந்தன. இவற்றில் எண்பது தொழிலுக்குத் தேவையான குறிப்புகள், புள்ளி விவரங்கள், பொருள்கள், அமைப்பு முறைகள் (Plans) ஆகியவற்றை நன்காராய்ந்து திட்டங்களை உருவாக்கினார். இவற்றைச் செயலில் நிறைவேற்ற அறிக்கைகளையும் தயாரித்தார். இத் திட்டங்களில் சிலமட்டுமே செயலளவில் உருவம் பெற்றன



கோவை பீளமேட்டிலுள்ள மின்சார மோட்டார் உற்பத்திசாலை

**மின்சார மோட்டார் தொழிற்சாலை**

1939-ஆம் ஆண்டு ஜுலை 2-ஆம் நாளில் இத் தொழிற்சாலை நாயுடுவால் தோற்றுவிக்கப்பட்டது. இது, கோவை பீளமேட்டில் நூறுயிரம் சதுர அடிகள் கொண்ட நிலப்பரப்பில் மிகப் பெரிய கட்டிடத்தில் அமைந்திருக்கிறது. இதன் பெயர் 'நேஷனல் எலக்டிரிக் ஒர்க்ஸ்' (National Electric Works) என்பதாகும். இதைத் திறந்து வைத்தவர், அப்பொழுது சென்னை அரசாட்சியில் முதல் செயலாளராக இருந்த ஜி. டி. போக் என்பவர். இத் தொழிற்சாலையைத் தொடங்கும்போதே, மோட்டார்களை உற்பத்திசெய்யும் இயந்திரங்களையெல்லாம் இவர் தாமே செய்துகொண்டார்.

**நாயுடுவின் கருத்து**

"தொடக்கத்தில் அரைக் குதிரை யோட்டம் (Horse-power) முதல் 50 குதிரை யோட்டம் வரையில் பலவகை மோட்டார்கள் உற்பத்தி செய்வதுடன், வேறு பல நுண்ணிய இயந்திரங்களும் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறேன். எப்படியும் இவ்வாண்டு இறுதிக்குள் 100 குதிரை யோட்டமுள்ள மோட்டார்கள் வரை தயாரித்து விடலாமென்று கருதுகிறேன்" என்று, நாயுடு தொழிற்சாலைத் திறப்புவிழா நாளில் கூறியதிலிருந்து, இவருடைய ஊக்கமும் முற்போக்கான எண்ணமும் இனிது விளங்கும்.

**தொழில் திறன்**

'பால் பேரிங்' என்னும் ஒரு உறுப்புத்தவிர ஏனைய பகுதிகளெல்லாம் இத் தொழிற்சாலையில்

தயார் செய்யப்பட்டன. வெளிநாட்டிலிருந்து வரும் மின்சார மோட்டார்களைவிட நாயுடுவின் தயாரிப்பு, வேலைசெய்யுந் திறனில் மிகுந்தும், விலையில் மலிவாக வும் இருந்தது. ஆகவே, தொழில் சுறுசுறுப்பாக நடைபெறலாயிற்று. இரண்டு ஆண்டுகளில் இங்குத் தயாரித்த மின்சார மோட்டார்கள் மைசூர், வடார்க் காடு முதலிய பகுதிகளில் விவசாயத்திற்கும் வேறு வேலைகளுக்கும் பயன் படுத்தப்பட்டன. அவை இன்றுவரையில் கெடாமல் வேலைசெய்கின்றன வென்பது, நாயுடுவின் திறமை மிகுந்த வேலைத்திற னுக்கு நற்சான்றாகும். இன்னும் சேலம், கோவை, கோயில்பட்டி ஆகிய பெரிய நகரங்களிலுள்ள மில் களிலெல்லாம் இம் மோட்டார்களையே வாங்கிப் பயன் படுத்தினர்கள். இதன் மேன்மையையறிந்த ஆங்கிலக் கம்பெனி யொன்று, இம் மோட்டாரின் விற்பனை யுரிமையைத் தனக்குக் கொடுத்துவிடும்படி கேட்டதென்றால் இதன் சிறப்புக்கு வேறென்ன விளக்கம் வேண்டும்?

அமெரிக்கக் கம்பெனிகளுடன் ஒப்பந்தம்

இத் தொழிற்சாலையைத் தொடங்கிய பிறகு தான் நாயுடு மூன்றாவது மேனாட்டுப் பயணத்தைச் செய்தார். அந்தப் பயணத்தில் அமெரிக்க கம்பெனி களுடன் பல ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். அவற்றுட்சில: 'ரேடியோ' பெட்டிகள், 'காலனுக்கு அறுபது மைல் ஓடக்கூடிய சிறு மோட்டார் வண்டி கள், டியசல் (Diesel) மோட்டார்கள், இப்பொழுது பயன்பட்டு வருபவைகளைவிட 50, 100-சத விகிதம் அதிக மைல்கள் ஓடக்கூடிய டயர்கள் (Tires)

இயந்திரத் தொழிற்கருவிகள் (Machine Tools) ஆகிய இவைகளையெல்லாம் கோவையிலேயே உற்பத்தி செய்து, இந்தியத் தேவைக்குமேல் மிஞ்சுவனவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகும். ஆகவே, நாயுடு இவற்றையெல்லாம் தயாரிக்கும்படி தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும் பெருநோக்குடனிருந்தார் என்பதை அறியலாம்.

**சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் அழைப்பு**

நாயுடு பெருந் திட்டங்களுடன் இந்தியா வந்ததும் பலர் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஊக்கங்காட்டி அழைத்தார்கள். அப்பொழுது கொச்சியில் திவானயிருந்த சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள், கொச்சியில் தொழிற்சாலைகளைத் தொடங்கும்படி ஊக்கமூட்டி அழைத்தார். ஆனல், நாயுடு சென்னை மாகாணத்திலேயே அவற்றைத் தொடங்க வேண்டுமென்று கருதி மறுத்துவிட்டார்.

**தொழிற்சாலையின் நிலை**

மின்சார மோட்டார் தொழிற்சாலை இரண்டாண்டு மிக விரைவாக வேலைசெய்தது. ஆனல், போரினல் தொழிற்சாலைக்குவேண்டிய செப்புக் கம்பிகளும் இரும்புத் தகடுகளும் கிடைப்பது அருமையாய் விட்டன. ஆகவே, மோட்டார் உற்பத்தி வேலை சிறிது குறைந்துபோயிற்று.

## 2. மோட்டார், ரேடியோ தொழிற்சாலைகள்

**மோட்டாரும் ரேடியோவும்**

போக்கு வரத்துக்குரிய சாதனங்களில் மோட்டார் மிக முக்கியமானதாய் நிலவுகிறது. மக்கள்

அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்களில் ரேடியோ இன்றியமையாததாய் இடம்பெற்றுவிட்டது. ஆனால், இவையிரண்டும் மேனாடுகளிலிருந்தே இந்தியாவுக்கு இறக்குமதியாகின்றன. இச்சாதனங்களுக்காக இந்தியா கோடிக்கணக்கான ரூபாய்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவருகிறது. இவைகளை இந்தியாவிலேயே தயாரித்தால் விலை மலிவாயிருப்பதோடு செல்வமும் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் தங்கும். ஆதலால் நாயுடு இவற்றைத் தயாரிக்கும் முயற்சியையும் மேற்கொண்டார்.

### மோட்டார் தொழிற்சாலை

மின்சார மோட்டார் தொழிற்சாலையில் உற்பத்தி குறைந்துவிடவே, அத்தொழிற்சாலையில் மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்வதற்கு நாயுடு சோதனைகளைச் செய்து பார்த்தார். சோதனையில், பெரும்பான்மையான பாகங்களை இங்கேயே செய்யமுடியுமென்பதைக் கண்டறிந்தார். இம்முறையைக் கையாண்டு மோட்டார் வண்டிகளைத் தயாரிக்கும் முயற்சி உருப்பெற்று வளர்ச்சி யடைந்திருந்தால், ஏராளமான செல்வம் நம் நாட்டில் தேங்கியிருக்கும்.

### விளையாட்டு மோட்டார்

நாயுடு தன் சாதனைக்கு அறிகுறியாக விளையாட்டு மோட்டார் ஒன்றைத் தயாரித்திருக்கிறார். இது இப்பொழுதும் இவருடைய மாளிகையில் இருக்கிறது. இதில் ஒரு அவுன்ஸ் பெற்ரோலை ஊற்றி ஓடவிட்டால் ஒரு மைல் தூரம் ஓடுகிறது.

### ரேடியோ தொழிற்சாலை

இந்தியாவுக்கே புதிதான ரேடியோ பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை நாயுடு தொடங்கினர். இதை இந்திய அரசாட்சிக் குழுவில் நிதியமைச்சரா யிருந்த சர்.ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் 1941-ல் திறந்து வைத்தார். ஒலிக் கருவி (Speaker) விசைக்கருவி (Valves) இவ்விரண்டைத் தவிர ரேடியோ பெட்டி முழுவதும் ஒரே கட்டிடத்திற்குள் தயாரிக்கப்பட்டுவந்தன. ஐந்து விசைக் கருவிகளைக் (Valves) கொண்ட ஒரு ரேடியோப் பெட்டியின் விலை 70 ரூபாய் முதல் 120 ரூபாய்களுக்கு மேல் போகாது. ஆனால், இவைகளுக்கு வேண்டிய ஒலிக் கருவிகளையும் விசைக் கருவிகளையும் இப்போதைக்கு வெளிநாடுகளிலிருந்தே வருவிக்கவேண்டி யிருந்தது. அதனால் இத்தொழிற்சாலை நடைபெற முடியாமற் போய் விட்டது.

ஆயினும் தொழிற்சாலை திறப்புவிழாவின்போது மாதிரிக்காக அங்கேயே தயார் செய்யப்பட்ட ஒரு ரேடியோப்பெட்டி பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நாயுடு அவர்களின் திட்டப்படி தொழிற்சாலை வெற்றிபெற்றிருந்தால் மாதந்தோறும் பல ரேடியோப் பெட்டிகள் தயாரிக்கும் முயற்சி முன்னேறியிருக்குமென்று தெரிகிறது.

### மேலும் சில ஆவல்

நாயுடு அவர்கள் தமது அறிவின் திறத்தாலும் பல நாடுகளைச் சுற்றிப்பார்த்து அடைந்த படிப்பினைகளாலும் இந்நாட்டில் எத்தனையோ தொழில்களைச்

செய்து வெற்றிபெற்று மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார். மிக முயற்சியுடன் தொடங்கிய தொழிற் சாலைகள் வெற்றி பெருமல் போகவே மனமுடைந்து, டயர் உற்பத்தி, டியசல் மோட்டார், ரிப்ரிஜிரேட்டர், சிறிய மோட்டார் வண்டிகள் ஆகிய திட்டங்களை யெல்லாம் கைவிட்டு விட்டார். ஆயினும், இவருடைய தொழிற்சாலையில் வேலை கற்றுக்கொண்ட மாணவர்கள் போர்த்தொண்டில் ரேடியோ சம்பந்தமான பொறுப்பேற்று நல்ல திறமையைக் காட்டியிருக்கிருர்கள்.

### இயந்திரங்கள்

நாயுடு அவர்கள் தமது ஆவல்களை நினைவாக்குவதற்காக அவ்வப்பொழுது வெளிநாடுகளிலிருந்து வருவித்தும் தமது சொந்த முயற்சியில் தயாரித்தும் சேர்த்துள்ள இயந்திரங்கள் ஏராளம். இவற்றின் மதிப்பு ஏறக்குறைய பல இலட்ச ரூபாய்களுக்கு மேலிருக்கும். இவ்வளவு பெரும்பொருள் செலவிட்டாலும் இவற்றைத் தேடிச் சேர்க்க எல்லோராலும் முடியுமா என்பது ஐயமே.

## VI. பயிற்சிக் கல்லூரிகள்

### போர்க்காலத் தேவைகள்

அண்மையில் நடைபெற்ற இரண்டாம் உலகப் பெரும் போர்க் காலத்தில் பலவித தேவைகள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று பொறி நுணுக்கத் தொழிலாளர்கள் மிகுதியாக வேண்டியிருந்ததாகும். மோட்டார்வண்டிகளை இணைத்தல், பழுது பார்த்தல், ரேடியோ கருவிகள், மின்சாரக் கருவிகள், போர்க் கருவிகள் இவற்றின் நுணுக்கமான செயல்புரிதல் முதலிய பணிகளுக்கு வல்லுநர்கள் மிகுதியாகத் தேவைப்பட்டனர். ஆகையால் தொழிற்சாலைகளும், தொழிற் பயிற்சிக் கூடங்களும் ஆங்காங்குத் தோற்றுவிக்கப்பட்டன.

### பயிற்சிக் கூடம்

இயந்திரத் தொழிற் பயிற்சி, போர்க் காலத் தேவைக்கு மட்டுமின்றிப் பிற்கால மக்கள் வாழ்க்கைக்கும் பெரிதும் பயனளிக்கக் கூடியது. இதை நன்கறிந்திருந்த நாயுடு, நம்மவர்கள் தொழிற் கலையறிவு பெறவேண்டுமென்று விரும்பி ஊக்கத்துடன் முயன்று ஒரு பயிற்சிக் கூடத்தைத் தொடங்கிவைத்தார். மின்சார மோட்டார் தொழிற்சாலை வேலை செய்துகொண்டிருந்த காலத்தில் (1941-ல்) அங்கேயே தொழிற் பயிற்சிக்கும் இடம், பொருள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்தார். தொடக்கத்தில் ஐம்பது மாணுக்கர்கள் தொழிற்கலைப் பயிற்சியில் ஈடுபட்டனர். அடுத்த ஆண்டில் இவர்கள்

தொகை நூறாகிவிட்டது. இம் மாணுக்கர்கள் தங்குவதற்கும் உணவு உண்பதற்கும் சிறு இல்லமொன்று அமைத்திருந்தார்.

## போர்த்தொழில் வல்லுநர் விடுதி

1942-ல் தொழிற் பயிற்சி மாணுக்கர்களின் எண்ணிக்கை மிகுதியாய்விட்டதால் பயிற்சிக்கூடத்தை, பீளமேட்டிலிருந்த மின்சார மோட்டார் தொழிற்சாலை யிடத்திலிருந்து மாற்றி, கோவை நகரிலுள்ள யூ. எம். எஸ். நடுநிலையத்தைச் சேர்ந்த ஒரு பகுதியில் அமைத்தார். நாளடைவில் போரின் கொடுமை நாடெங்கும் பரவி உணவுப் பஞ்சம், தண்ணீர்ப் பஞ்சம் முதலிய குறைகள் தோன்றின. இவற்ருல், பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாணுக்கர்கள் பெரிதும் துன்பப்பட்டார்கள். இதைக்கண்ட நாயுடு, 1945 ஜனவரியில், மாணுக்கர்களுக்கு ஒரு குறையுமில்லாதவகையில் 'போர்த்தொழில் வல்லுநர் விடுதி' (U. M. S. War Technicians' Hostel) ஒன்றைப் பெரும்பொருள் செலவில் புதிதாக நிறுவினுர். தொழிற்கலைப் பயிற்சியும், மாணவர் விடுதியும் இன்றைக்கும் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

தொழிற்கலை மாணவர்கள், மோட்டார் இயந்திரப் பகுதிகளை இணைத்தல், மின்சார வேலை, உலோகங்களைப் பற்றவைத்தல் முதலிய பயிற்சிகளில் ஈடுபட்டுப் பயின்ருர்கள். இப்பயிற்சிகளுக்காக மோட்டார் வண்டிகள், மின்சாரக் கருவிகள் முதலிய இரண்டு லட்சம் மதிப்புள்ள பொருள்களை நாயுடு நன்கொடையாக அளித்துள்ளார்.

'பாலிடெக்னிக்'

நாயுடுவின் விருப்பம் இத்துடன் நிற்கவில்லை. நம் நாட்டு இளைஞர்கள் மோட்டார், ரேடியோ பற்றிய கலை நுணுக்கங்களை நேரடியாக (Practical) பயின்றறிய வேண்டுமென்று பேராவல் கொண்டார். ஆகையால், இலட்சக்கணக்கான பொருட் செலவில் 'பாலிடெக்னிக்' என்னும் கல்லூரியைத் தோற்றுவித்தார். இதை அப்பொழுது சென்னையில் கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹோப் அவர்கள் திறந்து வைத்து, நாயுடுவின் செயலைப் பாராட்டினர்.

இக்கல்லூரி, 'ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்' என்ற பெயருடன் விளங்குகிறது. இது, இரண்டு பிரிவுடையதாயிருக்கிறது. இதில் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மோட்டார், ரேடியோ முதலிய தொழிற்கலைப் பயிற்சியை நேரடியாகப் பயின்று தேர்ச்சிபெற்று வெளியேறுகிருர்கள். இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கும் முன் குறித்த விடுதி பயன்படுகிறது.

எஞ்சினீரிங் கல்லூரி

மோட்டார், ரேடியோ இவைகளைப் பற்றிய கலைப்பயிற்சிக் கல்லூரியைத் தொடங்கிய நாயுடு, இயந்திரம், மின்சாரம் ஆகிய கலைப் பயிற்சியிலும் நமது நாட்டு இளைஞர்கள் தேர்ச்சிபெற வேண்டுமென்று அவாக் கொண்டார். சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப், நாயுடுவின் நல்லெண்ணத்திற்கு ஊக்கமூட்டியதால், நாயுடு விரைவில் முயன்று எஞ்சினீரிங் கல்லூரி ஒன்றையும் தோற்றுவித்தார். இது,




நாயுடுவின் பெருங் கொடையால் தோன்றிய
சர் ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்

'ஆர்தர் ஹோப் எஞ்சினீரிங் கல்லூரி' என்ற பெயருடன் 1945-ம் ஆண்டு, ஜுலை, 9-ம் நாள் தொடங்கப்பெற்றது. இது பீளமேட்டில் மின்சார மோட்

டார் தொழிற்சாலையை அடுத்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் உபயோகத்திற்காக, நாயுடு தம்மிடமிருந்த 67 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பெரிய நூல் நிலையத்தை வழங்கியுள்ளார்.

**கலைப்பயிற்சி ஆசிரியர்**

மோட்டார், ரேடியோ, இயந்திரம், மின்சாரம் ஆகிய கலைகளில் பயிற்சியளிக்க நேரடியாகப் பயின்று திறமை பெற்றுள்ள ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. ஆகையால், நாயுடுவே, நிர்வாகப் பொறுப்புடன் பயிற்சியளிக்கும் ஆசிரியர் பொறுப்பையும் மேற்கொண்டிருக்கிறார். இச் செயல்களிலிருந்து நாயுடுவுக்குத் தொழிற் கலையில் உள்ள ஆர்வமும், இளைஞர்கள் தொழிற் கலையில் தேர்ந்து நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்பதிலுள்ள அவாவும் நன்கு புலனாகும்.

**நாயுடுவின் பரந்த அறிவு**

'ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்' கல்லூரித் திறப்பு விழாவின்போது, நாயுடு "இன்றைய உலகத்தின் விரைந்த போக்கை உணர்ந்திருப்பவர்களுக்கு மோட்டார்வண்டி, ரேடியோ ஆகியவற்றின் பயனைப் பற்றித் தெரிவிக்கவேண்டியதில்லை. இவையிரண்டும் இல்லையேல் இப்போதைய வாழ்வின் எத்துறையும் வளர்ச்சிபெற வகையில்லை. இவையிரண்டும் பரந்த உலகப் பரப்பைச் சிறிய உருண்டையாக்குவித்திருக்கின்றன. போக்குவரத்து வசதிகளும், மிகத் தொலைவில் விரிந்துள்ள இடங்களை ஒருநொடியில் இணைக்கும் ஒலிப் பெட்டிகளும் பிரிக்க முடியாபடி கலந்திருக்கின்றன."

"விவசாய நாடான நமது இந்தியாவுக்கு மோட்டார் வண்டிகள் மிகவும் தேவையாகும். தொலைவான இடங்களுக்குச் சென்று பொருள்களை ஆங்காங்குச் சேர்க்கவும் மக்கள் விரும்பிய இடத்திற்குச் சென்று வரவும் திறமையான போக்குவரவுக்குரிய மோட்டார்கள் வேண்டும். இவற்றால் பஞ்சமுள்ள இடங்களுக்கு உணவுப் பொருள்களை விரைந்து கொண்டுபோய்ப் பங்கிட்டளிக்க முடியும்."

"மோட்டார் இயந்திரத்தின் மற்றொரு பெரும் பயனை நம் நாட்டு மக்களிற் பெரும்பாலோர் நன்கறிந்துகொள்ளவில்லை. அதை அறிந்துகொண்டால்தான் நமது விவசாயம் வெற்றிபெறும். "டிராக்டர்கள்" என்னும் ஒருவகை மோட்டார் வண்டிகள் உழவுமுதல் அறுவடை வரையில் நமது பயிர்த் தொழிலில் மிகவும் பயன்படக்கூடியது. மேனாடுகளில் இவை நன்கு பயன்பட்டு வருகின்றன. கூட்டுப் பண்ணை முறையில் நாமும் பயிர்த் தொழிலை விரிந்த அளவில் திறம்படச் செய்ய இந்த 'டிராக்டர்கள்' ஒவ்வொரு நிலையிலும் நமக்கு உற்ற தோழனாக விளங்கும்"

"ரேடியோக் கலை நமது மக்களின் பொது அறிவு, கலையறிவு, சமூக அறிவு, அரசியல் அறிவு, ஆகியவற்றை வளர்க்கக் கூடியதாகும். ஆகவே, இவ்விரு வகைத் தொழில்களிலும் தகுந்த பயிற்சியுடைய மக்களின் தொகை பெருகவேண்டுமன்றோ? அதைச் செய்யவே இக்கல்லூரி தோன்றியிருக்கிறது" என்று, கல்லூரித் தோற்றத்தின் காரணத்தை விளக்கிப் பேசினார். இதிலிருந்து நாயுடுவின் பரந்த அறிவும் சிறந்த நோக்கமும் விளங்கும்.

## VII. நாயுடுவின் நன்கொடைகள்

### பெருஞ்செல்வர்

திரு. ஜி. டி. நாயுடு அவர்கள், இப்பொழுது 'இலட்சாதிபதி' என்று எல்லோரும் போற்றி மதிக்கும்படி மிகவுயர்ந்த செல்வராய்த் திகழ்கிறார். எளிய நிலையிலிருந்த வறிய துரைசாமி, உயரிய நிலையில் செல்வ ஜி. டி. நாயுடுவாய் மிளிர்வதற்குக் காரணம் என்ன? சிலர், 'அதிர்ஷ்டம்' என்று கூறலாம்; சிலர் 'யோகம்' என்று சொல்லலாம். மற்றும் சிலர், வேறு காரணங்களும் விளம்பலாம். ஆனால், இவை போலியுரைகளே. உண்மைக்காரணம், இவருடைய இணையிலா அறிவும், இடையரு உழைப்புமேயாகும். கூரிய அறிவும் சீரிய உழைப்பும் இவரிடம் செல்வத்தைக் கொண்டுவந்து குவித்தன. 'அறிவுடையார் எல்லாம் உடையர்' என்பதும், 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவிலா, ஊக்கம் உடையான் உழை' என்பதும் பொய்யா மொழிகளன்றோ?

### கொடையாளி

பெரும் பொருள் படைத்த நாயுடு அவர்கள், யாவும் தமக்கே யுரியனவென்று தந்நல எண்ணங் கொள்ளவில்லை. "ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகவாம், பேரறிவாளன் திரு" என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி, இவரது செல்வம் பலருக்கும் பயன்படும் பெருமை பெற்றுள்ளது. நாயுடு, பிறர் நலத்திற்கெனப் பெருங்கொடை வழங்கியுள்ளார். நன்கொடையளிப்பதில் இவர் இணையற்றவர். தமக்குச் 'சரி' என்றும் 'முறை' என்றும் தோன்றிய

வழிகளில் தயக்கமின்றிப் பெரும் பொருளை வாரி வழங்கிவிடுவார். இத்திறத்தில் இவர், குமணன் முதலிய கொடையாளிகளும் பின்னிடக் கூடிய பெரு வள்ளலாகவே விளங்குகிருர்.

**தாராள நன்கொடை**

தொழில் நிலையங்களையெல்லாம் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கை, இப்பொழுது பலவிடங்களிலும் பேசப்படுகிறதன்றோ? ஆனல், பத்தாண்டுகளுக்கு முன்பே நாயுடு இக் கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்பினர். 1938-ல் ஏறக்குறைய பதினெட்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள மோட்டார் வண்டிகளைக் கோவை நாட்டாண்மைக் கழகத்தாரிடம் (Coimbatore District Board) இனமாகக் கொடுத்துவிடத் துணிந்தார்.

**நூல்நிலைய நன்கொடை**

இவ்வாறே, நாயுடு அவர்கள் தம்மிடமிருந்த ஏறக்குறைய 67,000 ரூபாய் மதிப்புடைய 20,000 புத்தகங்களையும் அதற்குத் தனிக் கட்டிடம் கட்டுவதற்காகப் பத்தாயிரம் ரூபாயையும், ஒரு நீச்சுக்குளம் ஏற்படுத்த மற்ருெரு பத்தாயிரம் ரூபாயையும் நன்கொடையாக ஏற்றுக்கொள்ளும்படி, கோவை நகராட்சி மன்றத்தாருக்கு வலியக் கடிதம் எழுதினர்.

**தொழிற் பயிற்சி நன்கொடை**

நம் நாட்டு இளைஞர்கள் தொழில் நிபுணர்களாகி நாட்டுக்கு நலம்புரிய வேண்டுமென்பதில் பெரு விருப்புடைய நாயுடு, இன்னொரு வகை நன்கொடையில் நாட்டங்கொண்டு முயன்ருர். அஃதாவது: தமது

பஸ்கள் சென்று வரும் எல்லைக்குட்பட்ட நகராட்சி யினரிடம், தமது கம்பெனியின் பங்குகளில் (Shares) பெரும் பான்மையானவற்றைப் பிரித்துக் கொடுத்து விடுவதாகவும், அதற்காக அவர்கள் விலை கொடுக்கத் தேவையில்லை யென்றும், ஆனால் பங்குகளின் வாயி லாகக் கிடைக்கும் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு தொழிற் கல்வியைப் பயிற்றுவிக்க வேண்டுமென்றும் விளக்கி, பாடத்திட்ட நகல்களுடன் சுற்றறிக்கை விட்டுக் கேட்டார். ஏதோ ஒரு நகராட்சி மன்றம் மட்டும் திட்டத்தைத் திருப்பியனுப்பித் தங்கள் இய லாமையைத் தெரிவித்துக்கொண்டது. ஆகவே. நாயுடுவின் நன்னோக்கத்திற்கு மற்றவர்கள் இணங்கி வர இயலாத நிலையில் இந் நன்கொடைகள் பயன் தராமற் போயின.

### மாணவர்க்கு உதவிச் சம்பளம்

நாயுடு அவர்கள் முதல் உலகப் பயணம்செய்து திரும்பியபொழுது சென்னையில் வரவேற்பு நடந்ததல் லவா? அக் கூட்டத்தில் முன்பின் பழகியிராத பல மாணாக்கர்கள் இருந்தார்கள். அவர்களுடைய ஆர் வத்தையும், அறிவு வேட்கையையும் கண்ட நாயுடு, அவர்களில் எண்பது பேருக்கு, மாதம் பத்து பவுன் வீதம் உபகாரச் சம்பளம் உதவினார்.

### போர் நிதிக்கு உதவி

இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்துகொண் டிருந்தபொழுது போர் நிதிக்காகப் பெரும் பொருள் சேர்க்கப்பட்டதல்லவா? அந்நிதிக்கு நாயுடுவும் உதவி செய்தார். யூ. எம். எஸ். நடுநிலையத்தைத் திறந்து

வைக்க, சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் கோவைக்கு வந்திருந்தபொழுது, பெரும் பொருள் நன்கொடை யளிப்பதாக உறுதிமொழி புகன்றிருந்தார். அம்மொழிப்படி 1944-ல் ஒரிலட்சத்து ஓராயிரம் ரூபாய்களைப் (10,1000) போர் நிதிக்கு நன்கொடையாக வழங்கினர். இதற்காகக் கவர்னர் நாயுடுவைப் பெரிதும் பாராட்டினர்.

**தேசியப் பாதுகாப்பு நிதியுதவி**

போர்க்காலத்தில் அரசாட்சியினருக்குப் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டது. ஆகையால், நாட்டுமக்கள் தங்களிடமுள்ள பெருந்தொகையைத் தேசியப் பாதுகாப்பு நிதியில் சேர்த்துப் பிற்காலத்தில் பெற்றுக் கொள்ளலாமென்று அவர்கள் அறிக்கையிட்டு, மக்களிடம் உதவியை வேண்டினர். ஆனல், அக்காலத்தில் போர்க் குழப்பம் இருந்த நிலையில் போர்முடிவு என்னகுமோ, தங்கள் பொருள் போய்விடுமோ என்று கருதிய பல செல்வர்கள் இந்நிதிக்கு எட்டுணையும் உதவ முன்வரவில்லை; சிலரே உதவினர்கள். அச் சிலரில் நாயுடு சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த முறையில் பத்துலட்சம் (10,00000) ரூபாய்களைத் தேசியப்பாதுகாப்பு நிதியில் சேர்த்து அதற்குரிய பத்திரத்தை (National Saving Certificates) பெற்றுர். அக்காலம் இருந்த நிலையில், இது அரசாட்சியினருக்களித்த நன்கொடை போன்ற பேருதவியே என்பதில் தடையில்லை.

**உதவி நன்கொடைகள்**

நாயுடு அவர்கள் பல லட்சம் ரூபாய்களைப் பல்வேறு துறைகளில் பயன்படும்படி உதவி நன்

கொடையாக வழங்கியுள்ளார். அவைகளில் முக்கிய மானவை :

1. யூ. எம். எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த ஊழி யர்களின் நலவுரிமைக்காக ஓரிலட்சத்து ஐம்பதினுயி ரம் (1,50,000) ரூபாய்கள். இத்தொகை தொழிலா ளர்களின் கல்வி, சுகாதாரம் முதலியவற்றிற்குப் பயன்பட வேண்டுமென்பது நாயுடு அவர்களின் நற் கருத்து.

2. சென்னை மாகாணம் முழுமையுமுள்ள தொழிலாளர்களின் நன்மைக்காக ஓரிலட்சம் (1,00,000) ரூபாய்கள்.

3. தாழ்த்தப்பட்ட சமூகத்தார் முன்னேற்றத் திற்காக ஐம்பதினுயிரம் (50,000) ரூபாய்கள்.

4. பதினைந்து ஆண்டுகளுக்குமேல் யூ.எம் எஸ். நிறுவனத்தில் உழைத்திருக்கும் தொழிலாளர்களுக் குப் 'போனஸ்' கொடுப்பதற்காக இருபதினுயிரம் (2,00,000) ரூபாய்கள்.

5. தாழ்ந்த நிலையிலிருக்கும் மக்களை உயர்த்தும் கொள்கைகளை மேற்கொண்டு தோன்றும் பத்திரிகை களுக்கு உதவிபுரிய ஐம்பதினுயிரம் (50,000) ரூபாய் கள்.

6. ரேடியோ, மோட்டார், கலைப் பயிற்சி, தொழிற் பயிற்சிக்கு யூ. எம். எஸ். நிறுவனம் தக்க தென்று கருதும் வழிதுறைகளில் செலவிடுவதற்காத இரண்டுலட்சம் (2,00,000) ரூபாய்கள்.

இந்த ஐந்திலட்சத்து எழுபதினுயிரம் ரூபாய் களின் வட்டித் தொகையையோ, முதல் தொகை

யையோ மேற்குறித்த வகைகளில் செலவிடும் உரிமையை யூ. எம். எஸ். நிறுவனத்திற்கே விட்டுவிட்டார், நாயுடு. இத்தொகையைச் செலவிடுவதற்கு முன் மேற்படி நிறுவனம் மாற்றமடைந்தோ கலைந்தோ போகுமானால், தொழிலாளர்களுக்குப் பயன்படும் மருத்துவ நிலையமோ, கல்வி நிலையமோ ஏற்படுத்த வேண்டுமென்பது நாயுடு அவர்களின் கட்டளை.

7. இஃதன்றி, நாயுடு, போலீஸ்காரர்களின் குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்காக ஐம்பதினாயிரம் (50,000) ரூபாய் வழங்கியுள்ளார்.

8. சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ரேடியோ கலை நுணுக்கச் சோதனைச்சாலை (Laboratory) அமைப்பதற்காக இருபத்தையாயிரம் (25,000) ரூபாய் வழங்கியுள்ளார்.

9. இவ்வாறே, ஆந்திரா பல்கலைக் கழகத்திலும் ரேடியோ கலை நுணுக்கச் சோதனைச்சாலை யமைக்க அக்கலைக் கழகத்தாரிடம் பத்தாயிரம் (10,000) ரூபாய் வழங்கியுள்ளார்.

10. சென்னை, இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆண்டுதோறும் மோட்டார் எஞ்சினீரிங் கல்வி பயிலும் திறமையுள்ள மூன்று மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் (Scholarship) அளிப்பதற்காக இருபத்தையாயிரம் (25,000) ரூபாய்களை வழங்கியுள்ளார்.

11 அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் (Vice-Chanceller) சர் ஏ. இலட்சுமண சாமி முதலியார் தலைமையில், கோவைக்கு வந்திருந்த

பல்கலைக் கழகக் குழுவை (கமிஷன்) வரவேற்று, பெண்கள் குடும்பக் கல்விக்காக நான்கிலட்சத்துத் தொண்ணூறாயிரம் (4,90,000) ரூபாய் நன்கொடையும் கல்லூரி ஏற்படுத்த போதுமான இடம் ஒன்றையும் தந்துதவுவதாக நாயுடு அவர்கள் வாக்குறுதி யளித்துள்ளார்கள்.

இவ்வாறு பல லட்ச ரூபாய்களை வழங்கியுள்ள நாயுடு அவர்கள், வள்ளன்மையுடன் உயர்நோக்கு முடையவர் என்பது விளங்குகிறதன்றோ?

**கல்லூரி நன்கொடை**

1945-ல் நாயுடு அவர்கள் 'ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்' என்ற கல்லூரியையும் 'ஆர்தர் ஹோப் எஞ்சினீரிங் கல்லூரி'யையும் நிறுவினரல்லவா? அக் கல்லூரிகளுக்குரிய இலட்சக்கணக்கான மதிப்புள்ள கட்டிடங்கள், தளவாடப் பொருள்கள் முதலிய எல்லாவற்றையும் அரசாட்சியினரிடம் ஒப்படைத்தார், நாயுடு. அக்கல்லூரிகளை அரசாட்சியினர் ஏற்றுக்கொண்டனராயினும் அவற்றை நடத்தும் பொறுப்பை நாயுடுவையே சிறிதுகாலம் ஏற்றுக் கொள்ளும்படி நிபந்தனை விதித்தனர். அவ்வாறே 'கௌரவ டைரக்டராக' (Honorary Director) இருக்க உடன்பட்டார் நாயுடு.

இத்தகைய பெருவள்ளலாகிய நாயுடு அவர்கள், 'அமெரிக்கப் பெருங்கொடையாளராகிய நப்பீல்டு பிரபு (Lord Nuffield) போன்றவர்' என்று புகழ்ந்து போற்றப்படுவதில் வியப்புண்டோ?

## VIII. அறிஞர்களின் பாராட்டு

### சர் சி. வி. இராமன் பாராட்டு

நாயுடு அவர்களின் அறிவின் திறம், அருஞ்செயல் திறன், அருங்குணம், பெருங்கொடை முதலியவற்றைப் பலரும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். சர் சி. வி. இராமன் அவர்கள், "திரு. நாயுடு, கல்லூரியில் படிக்காமலே ஒரு இந்தியன் எவ்வளவு திறமையை இந்நாட்டில் காட்ட முடியுமோ அவ்வளவையும் காட்டியுள்ளார். நாயுடு போன்ற மனிதர்கள் உலகில் மிகவும் குறைவு. அவருடைய அறிவும் திறமையும் மிகவும் போற்றத் தகுந்தவை; மக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு" என்று பாராட்டியுள்ளார்.

இன்னொரு சமயம், சர் சி. வி. இராமன் அவர்கள், "நான் கோவையிலுள்ள எஞ்சினீரிங் கல்லூரிக்குச் சென்றிருந்த பொழுது, நாயுடு அவர்கள் கூட இருந்தார். அங்குக் குழுமியிருந்த மாணவர்களில் ஒருவர், 'ஐயா, ஒரு வைரக்கல்லில் துளையிடுவது எப்படி?' என்று என்னைக் கேட்டார். நான், பங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தில் வைரங்களை வைத்து அவற்றின் உண்மைகளை ஆராய முயன்றிருந்த போதிலும், மாணவரின் வினவுக்கு உடனே விடையளிக்கத் தோன்றவில்லை. ஆனால், நாயுடு அவர்கள் விரைவாகவும் சரியாகவும் விடை கூறி விளக்கினார். இதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நாயுடு அவர்கள் பெரிய அனுபவஞானி" என்று வியந்து பாராட்டிக் கூறினார். வேறொரு சமயம் இவர், "கோவை வாசிகள் தங்களிடையே

கல்வியிலும் இளைஞரிடமும் மிகுந்த அக்கறை கொண்ட நாயுடு இருப்பதைக் கண்டு பெருமை கொள்ளவேண்டும்'' என்று போற்றியுள்ளார்.

**அமெரிக்கர் பாராட்டு**

நாயுடு அவர்கள் அமெரிக்கா சென்றிருந்த பொழுது அங்குள்ள இயந்திர விஞ்ஞான நிபுணர்கள் பலர் இவரைப் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள். ஒருவர், 'நாயுடு அவர்கள் இரக்க சிந்தையும் கூரிய அறிவுமுள்ளவர். ஒரு முக்கிய இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுகளைப் போக்க வியலாமலிருந்த பொழுது அவர் கூறிய அறிவுரைகள் 2000 டாலர்கள் வீண் செலவைத் தடுத்தது'' என்று வியந்து பாராட்டியுள்ளார். இன்னொருவர், 'அன்புள்ள நாயுடு, தங்களுடன் பழகக் கிடைத்த சிறிது நேரத்தில் என் வாழ்வைப் பொன்னாக்கிக்கொண்டேன். நான் தங்களிடமிருந்து மிகச் சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்ளும் பேறு பெற்றேன்'' என்று பாராட்டிக் கடிதம் எழுதியுள்ளார்.

**மேயர் பாராட்டுரை**

சென்னை நகர முன்னாள் மேயர் திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள் கோவைக்கு வந்து ஒரு கூட்டத்திலே பேச நேர்ந்தபொழுது, "நண்பர் திரு. ஜி. டி. நாயுடு அவர்களைப்போல நல்ல அறிஞர்களை நாட்டிற்கு நல்ல தொண்டு செய்யக்கூடிய முறையிலே நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். அவர்களுடைய அறிவுத் திறன் முழுவதும் நமக்கு அழகாகப் பயன் படும்படியான முறையிலே செய்தாலன்றி அவர்களுடைய சேவையை நாம் இழந்

தவர்களாவோம். அவர்கள் தன்னலமற்று பிறருக்குத் தமக்குக் கிடைத்த அறிவையெல்லாம் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்துடனும் நல்லவிதமான தொண்டு செய்வதற்கு ஏற்ற ஒரு முறையையுமே அவர்கள் இப்பொழுது மேற்கொண்டிருக்கின்றார்கள். தேசம் முன்னேற்றம் அடைய வேண்டும். தேசமக்களெல்லாம் அறிவு பெற்றவர்களாக வாழவேண்டும். மக்களிடத்திலே அறிவின் கண் கொண்டு பார்க்கக்கூடிய புலமையானது மிகுந்திருக்க வேண்டும். இனிமேல் அரசாங்கம் வகுக்கக்கூடிய பாடத்திட்டங்களெல்லாம் தனித்தனி முறையிலே இருக்கவேண்டும். அறிவுச் சுடரைக் கொடுக்கக் கூடிய நிலையிலே அமைதல் வேண்டுமென்ற ஒரு சிறந்த பண்பாட்டினைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடத்திலே அரசாங்கம், சிறப்பாக நமது சென்னை அரசாங்கம் நன்றாகக் கலந்து ஆலோசித்து அவர்களுடைய முழு அறிவையும் அநுபவத்தையும் அவர்களுடைய ஆற்றலையும் நம்முடைய மாகாணத்துக்குப் பயன்படுத்திக் கொடுக்குமாறு வேண்டிய தூண்டுதலைச் செய்யவேண்டியது அவர்களுடைய சிறந்த பொறுப்பு என்பதை நான் மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இத்தகைய அறிவுபடைத்த நண்பர் திரு. ஜி டி. நாயுடு அவர்களிடத்தில் மிளிரும்படியான பலவிதமான தூய நல்ல நோக்குக்கொண்ட கருத்துக்களையெல்லாம் நான் கேட்டுணர்ந்து இறும்பூது எய்தினேன், இறுமாப்பு அடைந்தேன், உள்ளம் குளிர்ந்தேன், உவகை பூத்தேன்" என்று மகிழ்வுடன் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

**திரு. வி. வி. கிரியின் பாராட்டு**

சென்னை அரசாட்சிக் குழுவில் அமைச்சராயிருந்த திரு. வி. வி. கிரி அவர்கள், "அனைத்திந்திய தேசியத் திட்டக் குழுவை (இதன் தலைவர் பண்டித ஜவாஹர்லால்நேரு அவர்கள்) தொடங்கும்பொழுது, நானும் சர். எம். விஸ்வேஸ்வரய்யா அவர்களும், அக்குழுவில் திரு. ஜி. டி. நாயுடு அவர்களே முதன்மையிடம் ஏற்கவேண்டுமென்று விரும்பினோம். நாயுடு அவர்கள் இந்நாட்டில் எளிதில் காணமுடியாத செயலை நேரடியாகச் செய்துகாட்டக்கூடிய எஞ்சினீயராவார்" என்று நாயுடுவின் தொழில் திறத்தைப் பாராட்டியுள்ளார். இவ்வாறே, திருவாளர்கள் **சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், சர். எம். விஸ்வேஸ்வரய்யா** முதலிய பேரறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

**பத்திரிகைகளின் பாராட்டு**

நாயுடு அவர்களைப் பற்றிய பாராட்டுரைகள் 'இந்து' (The Hindu), 'மெயில்' (The Madras Mail), 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (Indian Express), 'ப்ரீ இந்தியா' (Free India), 'சுதந்தரா' (Swadantra), 'நியூ ஜஸ்டிஸ்' (New Justice), முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும், 'சுதேசமித்திரன்', 'பாரத தேவி', 'சிவாஜி', 'தமிழ் முரசு', 'ஈழகேசரி', 'நாரதர்' முதலிய தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. பத்திரிகைகளின் பாராட்டுரைகளிற் சில பின்வருமாறு :

'நாயுடு இந்தியாவின் போர்டு – எடிஸன் இணைப்புப் பிறவி........அவரின் களிம்பேறிய கரங்கள் எதையோ ஒன்றைச் செய்து கொண்டேயிருக்கின்றன'. —'ப்ரீ இந்தியா'

'விஞ்ஞான வளர்ச்சியையே வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டு நடப்பவர்'. —'சிவாஜி'

'தாமஸ் எடிஸனைப்போல், நாயுடு ஓர் பிறவி மேதை'. —'சுதந்தரா'

'திரு. நாயுடு சதா எதையேனும் செய்து கொண்டிருப்பவர். அவர் மூளை ஓய்வின்றி வேலைசெய்கிறது. இதற்கான ஆற்றலும், உறுதிப்பாடும் அவரிடம் ஏராளமாயிருக்கின்றன'. —'ஓரியண்ட் வீக்லி'

'நாயுடு மிகப்பெரிய இருதயத்துடன் சாதாரண மனிதராய்க் காணப்படுபவர். அவர் ஒரு கண்டுபிடிப்பாளர்; மேதை'. —'சண்டே டைம்ஸ்'

'இரவும், பகலும்......வாலிபனைப் போல் உழைப்பவர்; உற்சாகத்துடன் தன் வாழ்நாட்களை உண்மை தழுவி நடத்துபவர்'. —'நாரதர்'

'அவரை (நாயுடுவை) ஒரு இயந்திர மனிதன் என்றே கூறிவிடலாம். இயந்திரங்களின் நுட்பங்களை மிக அறிந்திருக்கிறார்'. —'ஈழகேசரி'

இவ்வாறான பாராட்டுரைகள் எண்ணிறந்தன. சிறந்த இயல்பும் செயற்கரும் செயலும் உடையவரை உலகோர் பாராட்டிப் புகழ்வது இயல்பே. இதனால் நாட்டுக்கு நன்மை விளைகிறது என்பது உண்மை.

## IX. நாயுடுவின் நற்பண்புகள்

### தோற்றம்

நாயுடு அவர்கள் இப்பொழுது அறுபது வயதை அடைந்துள்ளார். கோவை அவிநாசி ரோட்டிலுள்ள 'கோபால் பாக்' மாளிகையில் வாழ்ந்து வருகிறார். நாயுடு சரியான உயரமுள்ளவர்; மெலிந்த, ஆனால் உறுதியான உடற்கட்டுடையவர்; சிறிது பருத்த, வழுக்கையான தலை உடையவர்; உணர்ச்சிகளை வெளியில் காட்டாத எச்சரிக்கைத் தன்மையுடன் எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகமுடையவர்; மூலைக்கச்சமாக உடுத்தும் மெல்லிய வெள்ளுடையும், சாதாரண 'ஷர்ட்'டும், மேலே சிறிய துண்டும் உடையவராகவே எப்பொழுதும் காணப் படுவார்.

### ஊக்கம் நிறைந்த உள்ளம்

நாயுடு அவர்கள் இளம் பருவத்திலிருந்தே ஊக்கம் நிறைந்த உள்ளத்தினராய் விளங்குகிறார். எடுத்த செயலில் இடையூறு ஏற்பட்டாலும் இளைக்காமல் தொடுத்து முயலும் துணிவும் பெற்றிருந்தார். பஞ்சு வணிகத்தில் பெரும் பொருள் அழிந்தும் மனம் அழியாமல் முயன்று முன்னேறியதிலிருந்து இவரது உலையா ஊக்கத்தை உணரலாம். கப்பல் விபத்திற்குள்ளானபோது கலங்கா உள்ளத்துடன் கடலில் குதித்துப் படகிலேறிக் கரை சேர்ந்து மீண்டும் பயணத்தை மேற்கொண்டதிலிருந்து இவரது உள்ளத் துணிவை உணரலாம். நாயுடு, முதிர் பருவத்தை எய்தியிருக்கும் இந்நாளிலும் சுறு சுறுப்புடன் ஏதே

னும் ஒரு செயல் புரிவதில் பெரு விருப்புடையராய் ஒரு நாளில் 20 மணி நேரம் வேலை செய்கிருர் என்ருல், இவருடைய ஊக்கத்தின் உயர்வை உரைக்கவும் வேண்டுமோ ?

### அறிவுத் திறன்

நாயுடு அவர்கள் பிறப்பிலேயே பேரறிவு படைத்தவர். எதையும் உற்றுநோக்கி ஆராய்ந்துணரும் அருந்திறன் உடையவர். இதனுலேயே, பள்ளியில் பயிலாதவராயிருந்தும் சிறந்த தொழில் விஞ்ஞானியாகவும் தாவர விஞ்ஞானியாகவும் திகழ்கிருர் ; ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் வல்லவராய் விளங்குகிருர் ; அருந்தமிழ்ப் புலமையும் பெற்றுள்ளார். பேரறிஞர்களும் போற்றும்படியான அருங் கண்டுபிடிப்புகளிலிருந்து இவரது கூரிய அறிவுத் திறத்தைக் கூருமலே அறியலாம்.

### விருப்பம்

இந்திய மக்கள் சமூக வாழ்வில், கல்வியறிவில் சிறந்தும் தொழிற் பயிற்சியில் தேர்ந்தும் நேர்மையாகவும் உண்மையாகவும் வாழ வேண்டும் என்பதில் நாயுடு அவர்கள் பெரு விருப்புடையவர். மேனுட்டுப் பயணத்தில் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் வாழும் வாழ்க்கையை நேரில் அறிந்தவராதலால், மக்கள் ஒருவரை யொருவர் நம்பி உண்மையுடன் வாழ வேண்டும் என்ற விருப்பம் நாயுடுவுக்கு ஏற்பட்டுள்ளது. சிறப்பாக இந்திய நாட்டு இளைஞர்கள் தொழிற் கலைப்பயிற்சியில் தேர்ந்து நாட்டுக்கு நலம் புரிய வேண்டும் என்பதில் அவா மிக்குடையவர்.

இவர் தோற்றுவித்த கல்லூரிகளிலிருந்தும் நன்கொடைகளிலிருந்தும் நாயுடுவின் இவ்விருப்பத்தை நன்கறியலாம்.

## ஒழுக்கத்தில் உறுதி

நாயுடு, ஊக்கத்தில் உறுதியாய் இருப்பது போலவே ஒழுக்கத்திலும் உறுதியுடையவர். இவர் மது, ஊண் உண்பவரல்லர். அமெரிக்கா சென்றிருந்த பொழுது அங்கு, மக்கள் மது அருந்தியும் ஊண் உண்டும் வாழ்வதைக் கண்டு தமது மனம் மாறிவிடாமல் இருக்கப் பெரிதும் முயன்றார். ஒரு அட்டையில் மது, ஊண், மங்கை இம்மூன்றையும் தொடலாகாது என்று எழுதி ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கும்பொழுது இந்த அட்டையை எடுத்துப் படித்து உள்ளத்தை உறுதி செய்துகொண்டு படுப்பார். அமெரிக்கரின் வாழ்க்கை இவர் மனத்தைக் குலைத்த சில வேளைகளிலும் கையுடன், வைத்திருந்த இந்த அட்டையை எடுத்துப் படித்து நிலைகுலையாமல் இருந்தார். இதிலிருந்து இவரது ஒழுக்கத்தின் மேம்பாடு இனிது விளங்கும்.

## மொழிப்பற்று

நாயுடு தமிழில் பெரும் பற்றுள்ளவர். இளமையிலேயே இலக்கண நூல்களையும் சிலப்பதிகாரம் முதலிய இலக்கிய நூல்களையும் படித்து அதன் உயர்வை உணர்ந்திருக்கிறார். ஒரு சொற்பொழிவில் "தமிழ் ஒன்றே உயர்வு மிகுந்த இயற்கை மொழி என்றும் முதன் மொழி என்றும் பல இடங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறேன்" என்று கூறியிருப்பதிலிருந்தும்,

அமெரிக்காவிலுள்ள செயின்ட் லூயிஸ் நகரில் இவர் பயிற்சிபெற்றுத் திரும்பியபின், அப்பயிற்சிப் பள்ளிக்கூட அதிகாரிகளுக்குத் தமிழிலேயே கடிதம் எழுதியதிலிருந்தும் இவரது தமிழ்ப் பற்று நன்கு விளங்கும்.

**தேசிய உணர்ச்சி**

இந்தியாவிலிருந்து மேனுடுகளுக்குச் செல்ப கள் உடை உடுத்துவதில் முழு ஐரோப்பியராக திரும்பி வருவதைக் காண்கிறோம். ஆனால், நாய அவர்கள் பல நாடுகளுக்கும் சென்றிந்தபோதிலு மூலக்கச்ச உடையும் 'ஷர்ட்'டும் மலையாளத் து டும் அணிந்து இலண்டன் முதலிய நகரங்களில் தமி மகனுகவே நடமாடிவந்தார் என்பது வியப்பல்லவா 'ஹாட்டு'ம் 'ஸூட்'டும் போட்டு மிடுக்காகத் திரி மேனுட்டு நகரங்களில் தமிழ்நாட்டு உடையுடன் ந மாடவேண்டுமானுல் அதற்கு எவ்வளவு துணி வேண்டும்! எத்தகைய தேசிய உணர்ச்சி இருக்க வேண்டும்! இலண்டனில் இவரைக்கண்ட சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் "தமிழ்நாட்டில் நாயுடு அவர்கள் இயல்பாக எப்பொழுதும் காணப்படும் உடையிலேயே அங்கும் அவர் காட்சியளித்ததும் எனக்கு ஏற்பட்ட வியப்பு சொல்லத்தரமன்று" என்று பாராட்டிப் பேசியுள்ளார்.

**பிற இயல்புகள்**

நாயுடு அவர்கள் எல்லோரிடத்திலும் மலர்ந்த முகத்துடன் இனிமையாகப் பேசும் இயல்பினர்; நேர்மையும் கண்டிப்பும் உள்ளவர்; எளியவர்களுக்கு இரங்கும் சிந்தையர்; உலகத்தை உற்று நோக்கிப்

...ளையும் நன்குணரும் திறமை ... கலங்காத திண்மை உளத்தினர்; ...ங்கும் வள்ளன்மையினர். இவர் பார் ...ாம்புகளும் அடங்கிப் பணியும் மனவாற்றல் ...டைத்தவர். இத்திறத்தை அமெரிக்கரும் கண்டு ...ந்திருக்கின்றனர். இப்பொழுது இவரது மாளி ...க்குச் செல்வோர் கண்டு வியக்கின்றனர். "கற்ற ...களுக்கு ஒரு புதிர்; கல்லாதவர்களுக்கு ஒரு அதி ...ம்; விடைசொல்ல முடியாத கணக்கு; விவரிக்க ...டியாத பின்னல்; ஆழம் காணமுடியாத ஆழி; ...யினும் அமிர்தம் இருப்பது உறுதி; ஆம், சிந்தனை ...சய்யவேண்டிய மனிதர்தான் ஜி.டி. நாயுடு" என்று ...ந. சின்ன அண்ணாமலை என்பவர் வியந்து பாராட்டு ...திலிருந்து நாயுடுவின் அரும் பண்புகளை அளவிட் ...ரைக்க இயலாது என்பது நன்கு விளங்கும்.

## அறிவு வளர்ச்சியில் கருத்து

கல்வித் துறையில் பெருங் கருத்துடையவர் நாயுடு. இவர் தமது பயணத்தில் அரிய காட்சிகளை எல்லாம் அசைவுப் படங்களாகப் பிடித்துச் சேர்த்துள்ளார். அவை பூகோளம், விஞ்ஞானம் உடற்கூறு, விவசாயம், இயந்திரம் முதலிய அறிவுகளை வளர்க்க நேருக்கு நேர் சில மணி நேரங்களில் கற்பிக்கும் கல்விப் படங்களாம். இவற்றிற்காக இலட்சக் கணக்கான பொருள்களைச் செலவிட்டிருக்கிறார். கல்வி கற்பிக்க இப்படங்கள் மிகப் பயனுடையவை. இன்னும் இவர் 1948-ல் கோவையில் நடத்திய கண்

காட்சிச் சாலையும் பாரதி வரு
கல்வித்துறையில் நாயுடுவுக்கு இரு
கத்தை நன்கு காட்டும்.

**மக்கள் கடமை**

இத்தகைய அரும் பண்புகள் நிறைந்த அரிய மனிதரை நாட்டுக்கு நலம் பயக்கும் வகையில் போற்றிப் பயன் படுத்திக்கொள்ள வேண்டியது, பொதுவாக இந்திய மக்களின் கடமையாகும்; சிறப்பாகத் தமிழகத்தாரின் கடமையாகும்; அரசாட்சியினரின் கடமையுமாகும்.

100074
D w M93
31N49-2

சிட்டி பிரஸ், மதுரைரோடு, திருச்சிராப்பள்ளி.